பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 03 | 03 நவம்பர் 2018 | விதி : 125



**குழப்பத்தில் வெளிவரும் உண்மைகள்**



**உடல் எங்கே உள்ளது?**



**ஸ்மார்ட் உலகப் புரட்சியாளன் அம்ரோ**



'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'





இந்தியாவிலேயே அதிக சம்பளம் பெறும் நடிகை என்ற பெருமையைப் பெற்றுள்ளார் கங்னா ரணவத்.

ஜான்ஸி ராணியின் வரலாற்றுப் படமான 'மணிகர்ணிகா' வில் நடிக்க அவர் 14 கோடி இந்திய ரூபாயை சம்பளமாகப் பெற்றுள்ளார்.

முன்னதாக 'பத்மாவதி' படத்திற்காக தீபிகா படுகோன் 13 கோடியை சம்பளமாக பெற்று இந்த சாதனையை தன் வசம் வைத்திருந்தார்.

ரஜனியின் 'பேட்ட' படத்தில் பாபிசிம்ஹா, சசிகுமார், சிம்ரன், த்ரிஷா எனப் பெரும் நட்சத்திர கூட்டமே நடிக்கிறது.

இவ்வரிசையில் மாளவிகா மோகனனும் இணைந்திருக்கிறார். இவருக்கு படத்தில் முக்கிய வேடம் வழங்கப்பட்டுள்ளதாம்.




அஜித்தின் 'விஸ்
கட்டத்தை எட்டி
புதிய படம் பற்றிய
எச். வினோத் இ
இசையில், போனி
உருவாகிறது 'தல 5
வெற்றி பெற்ற 'பி
சொல்லப்படுகிறது

தெலுங்கு இயக்
நந்தினி ரெட்டி இ
புதிய படம் ஒன்றி
நடிக்கவுள்ளார்.
ஆனால் அதிர்ச்
படத்தில் அவர் 70
பாட்டியாக நடிக்கி
'மிஸ் கிராணி' என்கி
கொரியன் படத்தி
உருவாக்கமே இப்ப

'சர்கார்'
நடிக்கவுள்ள
'தளபதி
தொடங்கத்
அனேகப
பெயரிடப்ப



விஜயின் நடிப்பில் உருவாகியுள்ள 'சர்கார்' திரைப்படம் சுமார் 80 நாடுகளில் 1600 இற்கும் மேற்பட்ட திரையரங்குகளில் வெளியாகியுள்ளது.

இதற்குமுன் வெளியான விஜய் படங்களை விட உலக நாடுகளில் அதிக திரையரங்குகளில் வெளியாகும் படம் என்ற பெருமையை 'சர்கார்' பெறவுள்ளது.

புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 | 03 நவம்பர் 2018 | விதி : 125

# த.தே.ம.முன்னணி சைக்கிள் சின்னத்தைத் தூக்கி எறியுமா? தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் கேள்வி

தமிழ் மக்கள் பேரவையிலிருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பையும், புளட் அமைப்பையும் வெளியேற்ற வேண்டுமெனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ்ப் பேரவையின் இணைத் தலைவர்களான முன்னாள் முதல மைச்சர் சி.வி.விக்கினேஸ்வர னையும், வைத்திய கலாநிதி லக்ஷ்மன் அவர்களையும் தான் கேட்டுக் கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

சித்தார்த்தன் அரசியலமைப்பு உப குழுவில் ஒருவராகச் செயற் பட்டார் என்பதும், சுரேஷ் உள்ளூ ராட்சித் தேர்த்தலின்போது ஒற்றை யாட்சியை ஏற்றுக் கொண்ட ஆனந்த சங்கரியுடன் கூட்டாகப் போட்டியிட்டார் என்பதுவும் அவரது குற்றச்சாட்டுகளாகும்.

இச்சம்பவங்கள் இடம்பெற்றுப் பலமாதங்கள் கடந்த பின்புதான் அவை தமிழ் மக்களுக்கு விரோதமான நடவடிக்கைகள் எனக் கண்டுபிடித்துள்ளார். கஜேந்திரகுமார் இதைக் கண்டுபிடிக்க ஏன் இத்தனை காலமானதெனச் சிலர் கேள்வி எழுப்புகின்றனர்.

தமிழ்மக்களின் ஆயுதப்போராட்டம் தோற்கடிக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்களின் ஐக்கியம் மட்டும்தான் தமிழ் மக்கள் பலம் என்பது அடிப்படை உண்மை. முதல் முதலாகத் தமிழ் கூட்டமைப்பைவிட்டு வெளியேறி அதைப் பலவீனப்படுத்திய பெருமை கஜேந்திரகுமாரையே சாரும். அதனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் ஒரு பிளவு ஏற்பட்டு ஒரு பலவீனம் ஏற்பட்டது. மற்றது நல்ல சக்திகள் வெளியேறியதால் கூட்டமைப்புக்குள் தீய சக்திகள் பலம் பெறும் ஆபத்தும் ஏற்பட்டது இடுத்த பலவீனம். தமிழ் மக்கள் கூட்டமைப்பு ஐக்கியத்துக்கான அறை கூவலை விடுக்கும் நேரத்தில் ஏற்கனவே பேரவையில் உள்ளவர்களையே வெளியேற்ற வேண்டும் எனக் கேட்டபதன் நோக்கம் நேர்மையாக இருக்க முடியாதென்றே பல தமிழ் உணர்வாளர்கள் கருதுகின்றனர்.

இது பற்றித் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் கருத்து வெளியிடும்போது அரசியலமைப்பு உப குழுவில் பங்கு கொண்டமையால் அவர் நீக்கப்பட வேண்டுமானால், சுரேஷ் ஆனந்த சங்கரியுடன் கூட்டுச் சேர்ந்ததமையால் விலக்கி வைக்கப்பட வேண்டுமானால் அதாவது ஒற்றையாட்சிக்கு ஆதரவு வழங்கிய குற்றத்துக்காகத் தண்டிக்கப்பட வேண்டுமானால், ஒற்றையாட்சியின் கீழ் சம அந்தஸ்துக் கோரிய அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் சின்னமான சைக்களைத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் ஏன் இன்னும் தூக்கி எறியவில்லை எனக் கேள்வி எழுப்பினர்.

**“சட்டி பானையைப் பார்த்து நீ கறுப்பு என்றதாம்”**

# அந்நிய நாடுகளால் தீர்மானிக்கப்படும் இலங்கையின் அரசியல் அதிகாரம்



இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது அமைச்சரவையும் ஜனாதிபதியால் நீக்கப்பட்டு மஹிந்த ராஜபக் ஷவை பிரதமராகக் கொண்ட புதிய ஆட்சி அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட முன்னாள் இராஜாங்க அமைச் சரும் பிரபல நடிகருமான ரஞ்சன் ராமநாயக்க ஆட்சி மாற்றத்தின் பின்னணியில் சீனா இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

அதே வேளையில் 2015இல் மஹிந்தா கட்சி வீழ்த்தப்பட்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது அதன் பின்னணியில் இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் தீவிரமாகச் செயற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அப்படியானால் இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்றும் மக்களே தங்களுக்கான ஆட்சியை ஏற்படுத்துகின்றனர் என்றும் சொல்லப்படுகின்றதன் அர்த்தம் என்ன என்பது பற்றி இதுவரை யாரும் கேள்வி எழுப்பவில்லை.

எது எப்படி இருந்தபோதிலும் நாட்டு வளங்கள் விற்கப்படுவது தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. ஆனால் விற்கப்படும் நாடுகள்தான் மாறுபடுகின்றன.ஆனால் அரசியல்வாதிகளின் வங்கிக் கணக்குகள் மட்டும் உயர்ந்து செல்கின்றன.

மஹிந்தவா ரணிலா என்பதன் பின்னணியில் சீனாவா, இந்தியாவா என்ற கேள்வி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் எவரின் பின்னும் இலங்கையும், இலங்கை மக்களும் இருப்பதாகசத் தெரியவில்லை. அரசியல்வாதிகளே கிளித்தட்டு மறிக்கின்றனர்.

# இந்தியாவில் உலகிலேயே உயர்ந்த சிலை



இந்தியா சுதந்திரம் பெற்ற பின்பு முதல் முதலாக அமைக்கபடப்ட அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சராக பதவி வகித்தவர் சர்தார் வல்லபாய் பட்டேல். இந்தியா சுதந்திரம் பெற்ற பின்பும் பிரான்ஸ் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த ‘கோவா’ பிரதேசத்தை படை நடத்தி போரிடாமலேயே கைப்பற்றிய வீரராக இவர் அப்போது கருதப்பட்டார்.

இந்திய - சீன யுத்தத்தின் போது போர் மந்திரியாகப் பொறுப்பேற்று இந்தியாவின் பெரும் பகுதியை சீனாவிடம் பறிகொடுத்திருந்த பெருமையும் இவருக்குண்டு. இவருக்கு தற்சமயம் 43 கோடி இந்திய ரூபா செலவில் உலகிலேயெ உயரம் கூடிய சிலை நிறுவப்பட்டுள்ளது.

இந்தியாவின் தேசத் தந்தை எனப் போற்றப்படும் மகாத்மா காந்திக்கு இப்படியான சிலை நிறுவாமல், பட்டேலுக்கு எழுப்பப்பட்டதன் காரணம் காந்தி எல்லா மதங்களையும் மதித்தவர் எனவும் பட்டேல் ஒரு இந்துத் தீவிரவாதி எனவும் கூறப்படுகிறது. மோடியின் ஆட்சியில் இந்தியா இந்துத்துவ இந்தியா அல்லவா?

பாசம் பந்தம் நாட்டுப்பற்று எல்லாம் பதவிக்குத்
தன்னாலே தேசம் ஞானம் கல்வி ஈசன் பூசை
எல்லாம் காசுக்கப் பின்னாலே

மது வெறியும் மாதரைப் பெண்டாலும்
மனவெளியும் வெறியல்ல. மதவெறியில் மதியிழந்து
குதி போடும் கொடு வெளியே வெளி

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்






































புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

# குரல் எழுப்பத் தவறிவிட்டோமா!

தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழலில் தம்மைப் பலப்படுத்த வேண்டும் என்ற விடயத்தில் மஹிந்த மற்றும் ரணில் சார்ந்த அரசியற் கட்சிகள் ஈடுபட்டிருக்கின்றன. அவர்கள் எதிர் நோக்கவிருக்கும் பலப்பரீட்சையில் வெற்றி பெற வேண்டுமாயின் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர். ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்போ தம்முடன் எழுத்துரீதியிலான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுபவர்களுக்கே தமது ஆதரவை வழங்க இருப்பதாக சொல்லியிருக்கின்றனர்.

கடந்தகால அரசியல் வரலாற்றில் எழுத்து மூலம் செய்யப்பட்ட ஒப்புந்தங்கள் பற்றித் தெளிவாகத் தெரிந்திருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இப்படி ஓர் ஒப்பந்தத்துள் செல்வது சரியான முடிவாக இருக்குமா? முழுமையாக அவர்களை நம்பி இப்படியொரு நிபந்தனையை விதிப்பதென்பது...? ஒப்பந்தங்கள், கைச்சாத்திடுவது போன்ற விடயங்களில் மிகவும் கசப்பான அனுபவங்களைக் கடந்து வந்திருக்கிறது ஈழத் தமிழினம். தமிழ் தலைவர்களை எப்படியும் ஏமாற்றலாம் என்ற எண்ணமும் சிங்களத் தலைமைகள் மத்தியில் இன்னும் உண்டு. உலக நாடுகள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பதாலோ என்னவோ! இரு தலைவர்களில் ஒருவர் கூடத் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் கோரிக்கைக்கு இதுவரை மறுமொழி சொல்லவில்லை.

பண்டா - செல்வா ஒப்பந்தம் எழுத்தில் செய்யப்பட்டது. பின்னர் கிழித்தெறியப்பட்டது. டட்லி - செல்வா ஒப்பந்தம் எழுத்தில் செய்யப்பட்டுப் பின் கிடப்பிலிடப்பட்டுக் காணாமல் போய்விட்டது. வடக்கு - கிழக்கை இணைத்த தமிழ் தேசம் என்ற வரைபும் இந்திய - இலங்கை கூட்டு ஒப்பந்தத்தில் எழுத்தில் எழுதப்பட்டு பின்னர் இலங்கை நாடாளுமன்றத்தினால் பிரிக்கப்பட்டுவிட்டது. இதைவிட தற்போதுள்ளவர்கள் செய்யப்போகும் ஒப்பந்தம் அவற்றை விட வலிமையாக இருக்கப் போவதுமில்லை. அவற்றைவிடச் செழுமையாக இருக்கப் போவதுமில்லை. கனதியாக எழுதப்பட்ட ஒப்பந்தங்களே நடைமுறைப்படுத்தப்படாது காலாவதியாகப்போய்விட்ட நிலையில், அவ்வாறான நிலைமையே இந்த ஒப்பந்தங்களுக்கும் ஏற்பட்டுவிட்டால் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் என்ன சொல்லுவர்?

ஜனாதிபதி மைத்திரி தன்னிலையைத் தெளிவுபடுத்திய பின்பு தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அவர்களோடு ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பது எத்துணை சாத்தியமானது? "சமஷ்டியும் இல்லை. இணைப்பும் இல்லை." என ஜனாதிபதி தெளிவாகச் சொன்ன பின்பு இன்னும் நாம் அவர்களை நோக்கி நிற்பதுவும், நம்புவதும் எவ்வளவுக்கு நன்மை பயக்கும்?

"ஒன்றல்ல, இரண்டல்ல பல தடவைகளில் தமிழருக்காகத் தமது குரலை எழுப்ப தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தவறிப் போய்விட்டதாக மனித உரிமைச் செயற்பாட்டாளரான வண.செபமாலை சாடியுள்ளார். அதற்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் பதில் என்னவாக இருக்கலாம்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 26

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா



கன்னிமார் கோவிலைக் கடந்து நடந்தவேளை பிரதான பாதையின் இருபுறமும் முட்கம்பி வேலிகள் வரவேற்றன. முட்கம்பி வேலிகள் ஏதோ ஒரு செய்தியை சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன. 'குண்டுச் சத்தங்கள் தான் ஓய்ந்துள்ளது முள்வேலிகள் தொடரும்" என சொல்வது போல எனக்குத் தோன்றியது. உடல் களைத்திருந்தது. உப்புக் காற்றின் அகோரமும் மனித வெம்மையும் பசி கிடந்த உடலமும் நடப்பதற்கு கஷ்டமாக இருந்தது.

நாவின் வறட்சியால் தண்ணீர் குடித்தால் நல்லது போலிருந்தது. மகனுக்கு சிறிய போத்தல் ஒன்றில் கைவசமிருந்த நீரைக் கொடுத்த போது அவன் அதில் கொஞ்சம் அருந்திவிட்டு நீங்களும் குடியுங்கம்மா என நீட்டினான். உண்மையிலேயே அந்த நீர் அவனுக்கு போதாது என்பதை நானறிவேன். எஞ்சிய நீரை கணவரிடம் கொடுத்தேன். அவர் ஒரு மிடறு நனைத்து விட்டு இரண்டு மிடறு இருக்கத்தக்க தண்ணீரை என்னிடம் தந்தார்.

இவற்றை அவதானித்துக் கொண்டு கடமையில் இருந்த இளம் சிப்பாய் ஒருவன் ஓடிச்சென்று புதிய நீர்ப்போத்தல்கள் சிலவற்றைக் கொண்டுவந்தான். மகனிடம் சிறு பிஸ்கெற் பையையும் சிறிய புதிய தண்ணீர்ப் போத்தலையும் என்னிடம் ஒரு லீற்றர் கொள்ளளவுடைய தண்ணீர்ப் போத்தலையும் தந்தான். கைக்குழந்தையையும் சிறியவனையும் மாறிமாறிப் பார்த்தான். உண்மையிலே அவனுடைய விழிகளில் மனிதாபிமானம் நிறைந்திருந்தது.

எம்மைக் கடந்து ஓடியோடி வந்த மக்களுக்கு அவனிடமிருந்த தண்ணீர் கலன்களைக் கொடுத்துக் கொண்டிருந்தான். அவனுடைய சகபாடி இராணுவ வீரர்கள் அவனது செய்கையை கண்டித்துக் கொண்டிருந்தனர். அதற்கு அவன் பயப்படுபவனாகத் தெரியவில்லை. ஏதோ சிங்களத்தில் அவர்களைத் திட்டுவது குரலின் கடின தொனியில் விளங்கியது. பின்னர் அவர்களும் ஓடிச்சென்று வாளிகளில் தண்ணீர் கொண்டுவந்து களைத்த மக்களுக்கு தண்ணீர் கொடுத்தனர். சிலர் வாங்கிக் குடித்தனர். பலர் தண்ணீருக்குள் ஏதாவது கலந்து தந்து விடுவார்களோ என்ற பயத்தில் குடிக்கவில்லை.

'அப்பா இன்னும் எவ்வளவு தூரம் நடக்கோணும்? " என எனது நான்கு வயது மகன் கேட்டபோது அவன் இவ்வளவு தூரமும் நடந்து வந்ததை விதி என்பதா? நொந்து கொண்டேன். கைக்குழந்தையை கணவரிடம் கொடுத்து விட்டு மகனைத் தூக்கிக் கொண்டு நடக்கத் தொடங்கினேன். அவனுடைய பாதங்கள் கன்றிச் சிவந்திருந்தன. கால்களை வருடியபடியே தோள்மீது சாய்த்துக் கொண்டேன். அசதியில் நன்றாகத் தூங்கினான்.

ஒரு பனைவடலிக் கூடலுக்குள் வந்து சேர்ந்தோம். அங்கு கயல்மதியின் அக்கா சனநெரிசலால் மயங்கி விழுந்தாள். தண்ணீர் தெளித்து மயக்கத்தை போக்கி ஒருவாறு அவளையும் அழைத்துக் கொண்டு சனநெரிசலில் நசுங்கி முள்ளுக்கம்பிக்கு வெளியாக வந்து ஒரு பூவரசம் மரத்தின் கீழே இருந்தேன். சில பூக்களைப் பிடுங்கி ஒரு பார்பி பொம்மையை செய்து மகனிடம் கொடுத்தேன். நீண்ட காலத்திற்குப் பின் அவனுடைய கண்கள் பிரகாசித்துச் சிரித்தன. சுமார் எட்டடி அகலம் கொண்ட நீண்ட முட்கம்பிப் பாதையால் மக்கள் நடந்து கொண்டிருந்தனர். முட்கம்பி தாண்டிவந்த தாய்மார், சிறுவர்களைத் தவிர ஆண்களுக்கு ஒரு சிறிய உருவமுடைய ஆமிக்காரன் பெரியதடியால் அடித்து உள்ளே போகுமாறு கத்தினான்.

அவனது பாஷை எனக்குப் புரியவில்லை. ஆனாலும் அவனது முகபாவமும் அங்க அசைவுகளும் அநாகரிகமாக பேசுவதை உணர முடிந்தது.

பக்கத்தில் ஒரு சகோதரி இருந்தாள். அவள் நன்றாக சிங்களம் கதைப்பாள். அவளிடம் 'என்னவாம் உவன் சொல்றான்?" எனக் கேட்டேன். 'நாய்க்குப் பிறந்ததுகள். அடிமை நாய்களே" எனப் பேசுவதாகக் கூறினாள். ஏனோ தெரியவில்லை அவனை இழுத்துப் போட்டு மிதிக்க வேண்டும் போலிருந்தது. அந்த இடத்தில் அவன் மட்டுமே நின்றான். அவனருகாக கடந்து வரும் போது 'நல்ல தாய்க்குப் பிறக்காத எருமை மாடே. எந்தக் கழிவில பிறந்தியோ தெரியேல்லை. நாதாரியே உன்னைப் பார்க்க கோமாளி போல இருக்குது" என சிரித்தபடி கூறினேன். அவனுக்கு எனது மொழி தெரியாததால் சிறிது சிரித்துக் கொண்டான்.

என் அருகில் வந்தோரும் தமது முகபாவங்களில் என்னைக் காட்டிக் கொடுக்கவில்லை. அவனைக் கடந்து வந்த பின்னர் எல்லோரும் வலிகளை மீறிச் சிரித்தோம். உண்மையிலேயே அந்தச் சிப்பாய் ஒரு கோமாளி போலவே செயல்பட்டான். அவன் சுமந்திருந்த ஆயுதம் கூட அவனது தோற்றத்துக்கு பொருத்தமற்றதே. தென்னிந்திய சினிமாப் படத்தில் பார்த்த ஒரு நகைச்சுவைப் பாத்திரமாக அந்த இராணுவ உடை தரித்த பாத்திரம் தோன்றி மறைந்தது. (சாட்சியம் நீளும்)

# குழப்பத்தில் வெளிவரும் உண்மைகள்

■ யோகநாராயணன்

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தன்னை ஜனாதிபதியாக உருவாக்கிய ஐக்கிய தேசிய முன்னணி அரசை எவருமே எதிர்பாராத நேரத்தில அதிரடி நடவடிக்கையாகக் கலைத்துள்ளார். அதேவேளையில் அவரை ஜனாதிபதியாக்குவதில் பெரும் பங்களிப்பை வழங்கிய ரணில் விக்கிரமசிங்கவின் பிரதமர் பதவியை பறித்ததன் மூலம் தன அதிரடி நடவடிக்கையை ஆரம்பித்தார்.

முதல் நாள் இரவு மஹிந்த ராஜபக்ஷவுடன் அப்பம் சாப்பிட்டுவிட்டு அவர் ஏற்றும் எதிர்பாராத வகையில அடுத்த நாள் காலையிலேயெ தான் மஹிந்தவுக்கு எதிராக ஜனாதிபதியாகப் போட்டியிடவுள்ளதான அதிரடி அறிவிப்பை வெளியிட்ட பெருமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உண்டு.

தற்சமயம் அவருக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சில கருத்து முரண்பாடுகள் இருந்தபோதிலும் அவை தொடர்பாக இருவரும் பேசி இணக்கப்பட்டு விட்டதாகச் செய்திகள் வெளிவந்த நிலையில் இப்படி ஒரு அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எப்படியிருந்த போதிலும் 2015இல் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை போன்ற இன்னுமொரு நடவடிக்கையை மேற்கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டு ஒரு சாதனையை நிலை நாட்டியுள்ளார். இன்னொரு புறம் சர்வாதிகார நடவடிக்கைகளிலும் ஊழல் மோசடிகளிலும் அதிகார துஷ்பிரயோகத்திலும் ஈடுபடுகின்றார் எனக் கூறியே அமைத்திரி மஹிந்தவை விட்டு வெளியேறி அவருக்கெதிராகத் தேர்தல் களத்தில் இறங்கினார். தற்சமயம் ஜனாதிபதி அதே மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்துள்ளார். இப்போது புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பரிந்துரைக்கு அமைவாகப் புதிய அமைச்சரவையும் அமைக்கப்பட்டு வருகின்றது மைத்திரிபால சிறிசேன முன்பு மஹிந்த ராஜபக்ஷ மேல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தது போன்று தற்சமயம் ரணில் விக்கிரமசிங்க மீது முன்வைத்து வருகிறார்.

இந்த மாற்றத்துக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியினரால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டமும் பெருமளவில் வெற்றிபெற்றதாகத் தெரியவில்லை.

இப்படியான எதிர்பாராத சம்பவங்கள் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் முன்னாள் அமைச்சரும் அரசமைப்பு நிபுணரும் அரசமைப்பு உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிப்பவருமான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன தெரிவித்த கருத்தை கவனத்திலெடுக்காமல் விட முடியாது. அதாவது ரணில் விக்கிரமசிங்க பதவிநீக்கம் செய்யப்பட்டமையும் மஹிந்த பிரதமராக நியமிக்கப்பட்டமையும் அரசியலமைப்புக்கு ஏற்புடையதல்ல எனத் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், கலாநிதி ஜயம்பதியின் கருத்து அரசமைப்பிலுள்ள ஆங்கில மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டதெனவும் சிங்க மொழியில் அமைந்துள்ளவையின் அடிப்படையில் ஜனாதிபதியின் நடவடிக்கை அரசமைப்புக்கு உட்பட்டதெனவும் அரசியலமைப்பில் மொழி தொடர்பான சந்தேகங்கள் ஏற்படும்போது சிங்கள மொழியில் உள்ளவையே ஏற்றுக்கொள்ளப்படுமெனவும் தெரிவித்திருந்தார். ஜி.எல்.பீரிஸ் ஒரு சட்டத்துறைப் பேராசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளையில் சட்டமா அதிபர் மஹிந்தராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டமை செல்லு படியாகுமென நாடாளுமன்ற சபாநாயகருக்கு அறிவித்துள்ளார்.

இங்கு நாம் அவதானிக்கவேண்டிய முக்கிய விடயம் இச்சர்ச்சை தொடர்பாக அறிவிக்கப்பட்ட முடிவின்படி தமிழ் மக்களுக்கு ஒரு செய்தி சொல்லாமலே இடிந்துணர்த்தப்பட்டுள்ளது.

புதிதாகக் கொண்டுவரப்பட உள்ளதாகக் கூறப்படும் உத்தேச அரசமைப்பின் சிங்களத்தில் ஏக்கிய ராஜ்ய என்றும் தமிழில் ஒன்றிணைக்கப்பட்ட நாடு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஏக்கிய ராஜ்ய என்றால் ஒன்றிணைக்கப்பட்ட நாடு என்று அர்த்தப்படாது எனப் பல தரப்பினராலும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஒன்றிணைக்கப்பட்ட நாடு என்றால் சிங்களத்தில் 'எக்செத் ராஜ்ய" என வரையப்பட்டிருந்த







வேண்டுமெனக் கூறப்பட்டது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், பேச்சாளர் சுமந்திரனும் அது பிரிக்கப்படாத, பிரிக்கப்பட முடியாத, ஒன்றிணைக்கப்பட்ட நாடு என்றே அர்த்தப்படுவதாக வலியுறுத்தி வந்தனர்.

தற்சமயம் மொழி தொடர்பான சந்தேகங்கள் வரும்போது சிங்களத்தில் உள்ளவையே ஏற்றுக்கொள்ளப்படும் என்பது நடைமுறையில், பிரதமர் நியமனம் அங்கீகரிக்கப்பட்டதன் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது.

எனவே ஒரே நாடு ஒன்றிணைக்கப்பட்ட நாடு என்பன தொடர்பாக சர்ச்சைகள் எழும்போது, 'ஒரேநாடு" என்ற சிங்களத்தில் அமைந்துள்ளதே ஏற்றுக்கொள்ளப்படும் என்பதும் ஒன்றிணைந்த நாடு என்பது காலாவதியாகிவிடும் என்பதும் நடைமுறை மூலம் தெளிவுபடுத்தப்பட்டு விட்டது.

புதிய உத்தேச அரசமைப்பின் மூலம் நாடு பிளவுபடப் போகிறது எனத் தென்னிலங்கையெங்கும் பிரசாரம் செய்து வந்த மஹிந்த அணியினர் ஆட்சிக்கு வந்து விட்டனர். அவர்கள் இந்த அரசமைப்பை ஏற்றுக்கொள்வார் கள் என்றோ அமுலுக்குக் கொண்டுவருவார்களென்றோ எதிர்பார்க்க முடியாது.

இந்த நிலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு வாய்ப்பை வழங்கக் கூடும் அதாவது சிங்கள ஆட்சியாளர்கள் மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டனர் என்றும் தாம் ஜனநாயக வழியில் சர்வதேசத்தின் உதவியுடன் போராடி தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கப் போவதாக தேர்தல் மேடைகளில் முழக்கம் செய்ய முயலக்கூடும்.

1965 ஆண்டு தமிழரசுக் கட்சியினர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அரசாங்கம் அமைத்தனர். தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் மு.திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராகப் பதவியேற்றார். டட்லி- செல்வா ஒப்பந்தத்தின் மூலம் மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டு அதிகாரப் பரவலாக்கம் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. கண்துடைப்பாக வடக்கில் ஒரு மாவட்ட சபை அமைக்கப்பட்டு அதன் தலைவராக பொட்டர் நடராசா தெரிவுசெய்யப்பட்டார். சில நாட்களிலேயே மாவட்ட சபையால் எந்தப் பயனும் இல்லை என்று அவர் தலைவர் பதவியை ராஜினாமா செய்து வெளியேறிவிட்டார். டட்லியுடன் சேர்ந்து தமிழ்மக்களை ஏமாற்ற தமிழரசுக்கட்சி எடுத்த முயற்சி தோல்வியில் முடியவே அந்த மாவட்ட சபை செயலிழந்துபோனது. நான்கரை வருடங்களாக ஆட்சியதிகாரத்தின் பங்காளர்களாக விளங்கியும், டட்லி - செல்வா ஒப்பந்தம் நிறைவேற்றப்படவோ,

(18ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்ப்புலமை பேராசான் வித்துவான் வேந்தனார்

எதிர்வரும் 05.11.2018 திங்கட்கிழமை வித்துவான் வேந்தனார் அவர்களின் நூற்றாண்டுப் பிறந்த தினம் ஆகும். அதனையொட்டி இக்கட்டுரை வெளியாகிறது.

**தீவகம் வே. இராசலிங்கம்**

ஆயிரத்தித் தொழயிரத்தித் தொண்ணூறுகளில் மல்லிகைப் பந்தல் வெளியீடாகக் கவிஞர் தில்லைச்சிவன் "நான்" என்றொரு கையடக்கப் புத்தகத்தை வெளியிடுகிறார். அந்தப் புத்தகம் என்னிடம் கனடாவில் இருக்கிறது. வேலணை, வங்களாவடிச் சந்தியை மையமாக வைத்து, ஒரு மூன்றுமைற் கற்கள் விட்டத்தில் ஒரு ஆரை கீறினால், அதற்குள் வரலாறாக இருக்கும் ஐம்பது புலவர்கள் என்ற பதிவைக் கொண்ட "வேலணைப் புலவர்கள் வரலாறு" தான் அந்த நூல், அந் நூல் வெளிவந்த உடனேயே விற்றுத் தீர்ந்தது என்ற தகவலையும், கவிஞர் தில்லைச்சிவன் எனக்குத் தந்தார்.

புத்தகத்தில் எனது பெயரும் பதிவாகி இருப்பதைப் பார்த்தேன். கவிதையும், கல்வியும் சிறந்த வேலணையில், பள்ளம்புலம் சார்ந்த பகுதியில் இரண்டு சைவ ஆலயங்கள் பிரசித்தமானது. ஒன்று பள்ளம்புலம், முருகமூர்த்தி கோவில், மற்றையது மயிலப்புலம் திருப்பொலி ஐயனார் கோவில், இந்தப் பாடல்பெற்ற தலங்களின் பதிவில் வருபவர் வித்துவான் வேந்தனார் ஆகம்.

**வித்துவான் வேந்தனார்**

சரவணை கிழக்கு, வேலணை யில் பள்ளம்புலம்தான் வித்துவான் வேந்தனார் தோன்றிய இடம் ஆகும். வித்துவான் வேந்தனார் எழுதிய கட்டுரைகள் மட்டும் ஆயிரக்கணக்கானவை. அவர்தான் இருந்து கல்விகற்ற ஐயனார் கோவில் ஆலமர நிழலை பின்வருமாறு ஒரு வெண்பாவில் குறிப்பிடுகிறார்.

உள்ளம் உவகையுற ஊக்கமுடன் வீற்றிருந்து
அள்ளுசு வைத்தேனை ஆர்ந்திடல்போல் - விள்ளுஞ்சீர்
தெய்வமார் செந்தமிழைத் தேர்ந்துநான் கற்றவிடம்
ஐயனார் கோவிலடி ஆல்!

என்பது விசாலித்து விசுவரூபமாகி நிழல்கொடுத்து நின்ற அந்த ஆலடி ஐயனாரது அருள்பெற்றவர் என்பதற்குச் சான்றான வெண்பாவாகும்.

வித்துவான் வேந்தனாரது ஆளுமைக்கு எல்லையே கிடையாது. துமிழ்மறைக் கழகத்தின் திருக்குறள் மாநாடு, வேலணை கிழக்கு, அம்மன் கோவில் தென்மாட வீதியிலே நடைபெற்ற போது, எனக்குப் பன்னிரண்டு வயது, ஐம்பத்தெட்டுக் கலவரம் நடந்த துயரம் மாறமுன்பு இந்த மாநாடு நடைபெற்றது. எனது பாடசாலை செல்வதாகக் கூறி, அந்த



அரசியல் பகல் மாநாட்டுக்குச் சென்றிருந்தபோது எனது தாயார் என்னைத் தேடிவந்தார். வேந்தன் பேசிக்கொண்டிருந்தார். ஆயிரமாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட தமிழைச் சொல்ல அந்த ஆயிரத்தை ஆயிரம் தடவை சொல்லிய மாதிரி நீண்டு உரத்து ஆற்றிய உரை என் நெஞ்மதில் இன்னும் இருக்கிறது. வேந்தன் ஒரு தமிழ்கடல், நான் கல்விகற்ற போது எனது கல்விப் பொதுத் தராதர வகுப்புக்கு இருந்த பாடநூல்கள், சமயம் இலக்கியத்துக்கென்று இருந்தவை முழுவதும் வேந்த னார் அவர்களால் எழுதப்பெற் றவை ஆகும். சைவசமயத் திரட்டு, சீதை சிறையிருந்த சுந்தரகாண் டம், இன்னும் எண்ணற்ற நூல்கள் அந்நாளைய அரசாங்க அங்கீகாரம் பெற்ற நூல்களாய் அவை இருந்தன.

அந்நூல் ஒன்றில் அவர் எழுதிய சமர்ப்பணப் பாடல் ஒன்று தருகிறேன் பாருங்கள். முற்றிலும் எனது ஞாபகத்திலிருந்து இச்சமர்ப்பணத்தை உங்களுக்குத் தருகிறேன்.

பிறந்த அன்றே பெற்ற அன்னையை இழந்த என்மேல் உற்ற அன்பைச் சொரிந்துஎன்னை வளர்த்தெடுத்து ஆளாக்கிய சரவணையூர்த் தளையசிங்கம் அவர்களுக்கு இந்நூல் காணிக்கை

வேந்தனாரை வளர்த்தெடுத்தவர் சரவணையூர்த் தளையசிங்கம், அவரது பேரனார் என்பதாக எனது தாயார் கூறியிருக்கிறார். நிற்க. வேந்தனார் பற்றி கவிஞர் தில்லைச்சிவன் என்ன கூறுகிறார் என்று பாருங்கள்,

சொந்தவொரு முயற்சியினால்
தமிழைக் கற்று துலங்குமருட்
பெருங்குணத்தால் உலகுக்
கெல்லாம் தந்தகவி 'அம்மா' இந்
நாட்டின் செல்வத்
தமிழ்ச்சிறுவர்
மழலையெல்லாம்
தவழ வைத்தாய்!...

வேந்தனாரைத் தமிழ் அன்னை துரத்தித் துரத்திப் படிக்க வைத்த காரணத்தால் தமிழகம், ஈழம் எங்கும் தமிழைப் போதிக்கும் தகை பொருந்தியவராகத் தரணி எங்கும். பதிவாகினார்.

வேந்தனார் அவர்களின் கூற்றில் இருந்து பதியப்பட வேண்டியவை ஏராளம்.

இளந்தமிழர்களுக்கு அவரது அறைகூவல். காலத்தின் தேவை கருதிய பாடமாக இருக்கிறது.

"இளந்தமிழர்களே! உங்கள் உடம்பிலே ஓடுகின்ற குருதியின் ஒவ்வொரு துளியும், தமிழ் மொழிக்குத்தான் உரியது. தமிழைக் காப்பதுவே நீங்கள் செய்கின்ற அறம், தமிழுக்காக வாழ்வதே நீங்கள் ஈட்டுகின்ற பொருள். தமிழின் விடுதலை கண்டு மகிழ்வதே நீங்கள் அடைகின்ற இன்பம்" - என்ற அவரது அறைகூவலில், இரு வரிகள் மட்டுமே மேலே கூறப்பட்டவை ஆகும்.

தமிழுக்காக வாழ்பவன், தடுக்கப்படவும் அழிக்கப்படுவனுமாக இருப்பதற்குத் தமிழனே ஏதுவாக இருப்பதே இந்தக் காலம் கணிப்பாக இருக்கிறது.

காலைத் தூக்கி கண்ணில் ஒற்றி
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சி சீனிபோட்டு
பருகத் தந்த அம்மா -
பள்ளிக்கூடம் விட்ட நேரம்
பாதி வழிக்கு வந்து
துள்ளிக் குதிக்கும் என்னைத்
தூக்கித்
தோளிற் போடும் அம்மா!

என்பது அவரது அம்மா என்ற தலைப்பினால் ஆன பாடலில் ஒரு பகுதி இந்தப் பாடல்களால் சிறுவர்களுக்கான அரசபாடப் புத்தகங்களில், குழந்தைகளைத் துள்ள வைத்த பெருமை வேந்தனாருக்கே உரியது.

வித்துவான் வேந்தனார்' அவர்கள் பெரும் ஆசான்களாற் பாராட்டுப் பெற்றவர்.

"இனி இரசிகமா மணிகளே சோமசுந்தரப் புலவரின் வாரிசு ஆகிய கவிராயரின் நாமத்தை உரக்கக் கூறிப் பவனி வாருங்கள். வேந்தனார் அவர்களுக்கு இன்னும் பல பட்டங்கள் பேரறிஞர் களால் வழங்கப் பெற்றுள்ளன" என்று பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களாற் குறிப்பிடப்படுதல் பெரும் பாக்கியமன்றோ.. !

பாடுகின்றோர் எல்லோருங்
கவிஞ ரல்லர்
பாட்டென்றாற் பண்டிதர்க்கே
உரிமை அல்ல
ஓடுகின்ற பெருவெள்ளப்
பெருக்கே போல
உணர்ச்சியிலே ஊற்றெழுந்த
ஒளியால் ஓங்கி
வாடுகின்ற மக்களினம் மாட்சி
கொள்ள
மறுமலர்ச்சிப் பெருவாழ்வை
வழங்கு மாற்றல்
கூடுகின்ற கொள்கையினால்
எழுச்சி கொண்டு
குமுறுகின்ற கோளரியே
கவிஞ னாவான்.

வித்துவான் வேந்தனாரது இந்த வரிகள் கவிஞர்களைத் தட்டி எழுப்புவை யாகும்.

வேந்தனாரது மேற்படி கவிதையை யான் இன்றே கண்ணுற்றேன். எனது காலத்தின் பணிமனையில் என்னையான் திரும்பிப் பார்த்தேன். இவரது பாடல் என்னை உசுப்பியபோது, எங்கோ இருந்தும் வருகின்ற சில கருத்துக்கள் எனது வரிகளிலே உயிர்த்து நிற்பதைப் பார்க்கிறேன்.

சிறுவயதிலேயே தமிழ்ப்பற்றும் தமிழைக் கற்பதில் பெற்ற உத்வேகமும் "நாகேந்திரம்பிள்ளை எனத் தந்தையார் இட்ட பெயரை, தனித்தமிழ் ஈடுபாட்டி னால், தனது பதினாறாவது வயதில், தனது பெயரை "வேந்தனார்" என மாற்றினார்.

வேலணையின் மகத்துவத்தில் வேந்தனாரது ஆற்றலும் அறிவும், பதினாறாவது உயிர்ப்போடு இருக்கும் என்பதில் ஐயமில்லை.

காலைத் தூக்கிக் கண்ணில்
ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சிச் சீனி
போட்டுப்
பருகத் தந்த அம்மா!
புழுதி துடைத்து நீரும் ஆட்டிப்
பூவுஞ் சூட்டும் அம்மா
அழுது விழுந்த போதும்
என்னை
அணைத்துத் தாங்கும் அம்மா

என்னும் வேந்தனார் பாடலைப் பாடவைப்பதின் மூலம் தமிழ்மொழியையும், பண்பாட்டையும் அரும்புப் பருவத்திலேயே எமது குழந்தைகளுக்கு ஊட்டிவைப்போம். ●

# உடல் எங்கே உள்ளது?






கூட்டுக்குடும்பத்தில் அதிகம் சம்பாதித்துக்கொடுக்கும் பிள்ளை தப்பு செய்தால், அதைத் தட்டிக்கேட்க எல்லோருமே பயப்படுவார்கள். படுபயங்கரமான படுகொலையைச் செய்திருக்கும் சவுதி அரேபியாவை உலக நாடுகள் கண்டிக்கும்விதம் அப்படித்தான் இருக்கிறது. உலகின் எந்த நாட்டில் பிரச்சினை எழுந்தாலும், 'ஜனநாயகப் படுகொலையைச் சகித்துக்கொள்ள முடியாது' என அமெரிக்கா குரல் கொடுக்கும் ஐரோப்பிய நாடுகள் பின்பாட்டுப் பாடும். ஆனால், 'சவுதி இளவரசர் முகமது பின் சல்மானின் உத்தரவுப்படி, பத்திரிகையாளர் ஜமால் கஷோகி கொடூரமாகக் கொல்லப்பட்டிருக்கிறார்' என்பது உறுதியாகியுள்ளது. ஆரம்பத்தில், 'சவுதிமீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும்' என மிரட்டிய அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், இப்போது பல்டி அடித்திருக்கிறார்.

உலகிலேயே அதிகம் ஆயுதங்கள் வாங்கும் நாடுகள் பட்டியலில் இரண்டாம் இடத்தில் இருக்கிறது சவுதி. அந்த நாட்டுக்கு ஆயுதங்கள் விற்பவர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது அமெரிக்கா. "அமெரிக்காவுடன் சவுதி செய்துள்ள பொருளாதார ஒப்பந்தங்களின் மதிப்பு ரூ.33 லட்சம் கோடி. அவர்கள் ஆயுதம் வாங்க மட்டுமே எட்டு லட்சம் கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் போட்டுள்ளனர். அவர்கள்மீது பொருளாதாரத் தடை விதித்தால், அது சவுதியைவிட அமெரிக்காவை அதிகம் பாதிக்கும். கிட்டத்தட்ட அமெரிக்காவில் பத்து லட்சம் பேர் வேலையிழக்கும் நிலை உருவாகும்" என 'நியூயார்க் டைம்ஸ்' நாளிதழுக்கு அளித்த பேட்டியில் வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார் 'ஜனநாயக வாதி' ட்ரம்ப். கச்சா எண்ணெய், ரியல் எஸ்டேட், தொழில்நுட்பம் என்று பல துறைகளில் பல்வேறு ஐரோப்பிய நாடுகளும் சவுதியுடன் ஒப்பந்தம் போட்டுள்ளன. இப்படி சவுதியின் பணத்தை நம்பியிருக்கும் நாடுகள், இப்போது ஒப்புக்கே கண்டிக்கின்றன.

ஒக்ரோபர் 2ஆம் திகதி துருக்கி நாட்டின் இஸ்தான்புல் நகரில் இருக்கும் சவுதி தூதரகத் துக்கு, தன் திருமணம் தொடர்பான ஆவணங்களைப் பெறுவதற்காகச் சென்றார் 'வாஷிங்டன் போஸ்ட்' நாளேட்டின் பத்திரிகையாளர் ஜமால் கஷோகி. வெளியே அவரின் வருங்கால மனைவியான ஹேட்டிஸ் சென்ஜி வெகு நேரம் காத்திருந்தும், திரும்ப வரவேயில்லை கஷோகி. விசாரித்தபோது, 'கஷோகி திரும்பச் சென்றுவிட்டார்' என்ற பதிலே கிடைத்தது. ஆனால், 'கஷோகி தூதரகத்துக்குள் வைத்துக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார். சவுதி அரசுக்கு இதில் பங்கு உள்ளது. கஷோகியின் விரல்களை வெட்டி, தலையைத் துண்டித்து, உடலைத் துண்டு துண்டாக்கிக் கழிவுநீர்க் கால்வாய் மூலம் வெளியேற்றினர்' என சில ஆடியோ ஆதாரங்களை முன்வைத்துச் செய்திகள் பரவின. துருக்கி அரசும் இதை உறுதி செய்தது.

சவுதி மன்னர் குடும்பத்துக்கு நெருக்கமானவர் கஷோகி. பின்லேடனை பலமுறை பேட்டி எடுத்த பத்திரிகையாளர். "சமீபகாலமாக சவுதி அரேபிய இளவரசர் முகமது பின் சல்மானின் சர்வாதிகாரப் போக்கால் சவுதியில் 15இற்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மன்னர் குடும்ப விவகாரம் தொடர்பாகப் பேசிய பலர் கொலை செய்யப்பட்டுள்ளனர். அரச குடும்பத்துக்குள் நடந்த சில விவகாரங்களில் இளவரசருக்கு எதிரானவர்களுடன் ஜமால் நெருக்கமாக இருந்துள்ளார். இதைத் தொடர்ந்தே இளவரசர் உத்தரவின்படி ஜமால் கொலை செய்யப்பட்டிருக்கிறார்' என்று சவுதி ஜனநாயகவாதிகள் குற்றம் சாட்டுகிறார்கள்.

ஆரம்பத்தில் இதை மொத்தமாக மறுத்தது சவுதி. ஆனால், ட்ரம்ப் விடுத்த முதல் எச்சரிக்கையைத் தொடர்ந்து சவுதியின் பங்குச்சந்தை இந்த ஆண்டின் மிகப்பெரிய வீழ்ச்சியைச் சந்தித்தது. சவுதி முதலீட்டாளர்கள் மாநாட்டைப் புறக்கணிப்பதாக மேற்கத்திய நாடுகளின் முக்கியத் தொழிலதிபர்கள் அறிவித்தனர். இந்த நெருக்கடிகளைத் தொடர்ந்து, கடந்த 20ஆம் தேதி இதுகுறித்து அறிக்கை வெளியிட்ட சவுதி அரசு, 'சவுதி தூதரக அதிகாரிகளுக்கும் கஷோகிக்கும் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறி கொலை நடந்து விட்டது. கொலையில் சம்பந்தப்பட்டவர்களுக்குக் கடும் தண்டனை வழங்கப்படும்' என அறிவித்தது. மேலும் கொலையில் தொடர்புள்ளதாக சவுதியின் உளவுப் பிரிவு துணைத் தலைவர் அஹ்மத் அல் அசிரி, அரசின் ஊடக ஆலோசகர் சவுத் அல்-கஹ்தானி ஆகியோர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

"கஷோகி படுகொலை மிக மோசமான தவறு" என ஒப்புக்கொண்டிருக்கும் சவுதி வெளியுறவு அமைச்சர் அடேல் அல்-ஜூபேர், "சவுதி பாதுகாப்புப்படை இதைச் செய்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால், அவர் எப்படிக் கொலை செய்யப்பட்டார், அவரது உடல் எங்கே உள்ளது என்பது தெரியாது" என்று சொல்லியிருக்கிறார்.

அரசியல் செல்வாக்கும், உயர்மட்டத் தொடர்புகளும் கொண்ட கஷோகிக்கே இந்த நிலைமையென்றால், இதர பத்திரிகையாளர்களின் நிலை என்ன என்கிற அச்சம் எழுந்துள்ளது. 2017-ல் மட்டும் உலகம் முழுவதும் 71 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். எல்லாவற்றுக்கும் உச்சமாக, உலகத்துக்கே அகிம்சையைப் போதித்த காந்தி பிறந்த நாளில் கஷோகி மிகக் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளார். கருத்துச் சுதந்திரத்துக்கு எதிராக அரசுகள் இதுபோன்ற ஒடுக்குமுறைகளைக் கையில் எடுத்தால், அதைவிட ஜனநாயகத்துக்குக் கேடான விஷயம் வேறு எதுவும் இருக்க முடியாது. என்ன பதில் சொல்லப் போகின்றன சவுதியின் நட்பு நாடுகள்?

நன்றி : ஜூனியர் விகடன்

# வாரப்பலன்

## மேடம்
மனதில் புத்துணர்வு பிறக்கும். ஓரளவு கடன் தீரும். முக்கியமான பணிகள் முயற்சியால் நிறைவேறும். உறவினர் அதிக பாசம் கொள்வர். வாகனப் பயணம் அளவுடன் இருக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன் பற்றிச் சிந்திக்கின்ற வாய்ப்புக் கிட்டும். தேவையானதை செய்வீர்கள்.

## துலாம்
மதிநுட்பத்துடன் பணிகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடத்து பாசம் வளரும். பயணத்தைப் பலன் அறிந்து மேற்கொள்ளவும். பிள்ளைகளின் எதிர்கால நலன்களை கவனத்தில் கொள்வர். உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவீர்கள்.

## ரிஷபம்
உறவினர் உதவிகரமாக நடந்து கொள்வர். வாகனப் பயன்பாடு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் பலமாகும். விசேட விருந்தில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் போற்றத்தக்க முயற்றியால் குடும்பத்தில் ஒற்றுமை சீராகும். தொழிலில் உற்பத்தி குறைந்து காணப்படும்.

## விருச்சிகம்
கிரகங்கள் சுபபலன் வழங்குவர். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். சமூக நிகழ்வால் இனிய அனுபவம் கிட்டும். பிள்ளைகள் முன்னேற்றம் காண்பர். வழக்குகளில் தீர்வு தாமதமாகலாம். வீட்டு தேவைகள் தாராளமாக பூர்த்தியாகும்.

## மிதுனம்
புதிய எண்ணங்களை செயல்படுத்தக் கூடிய வாரம். குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். புதிய வீடு வாங்கலாம். குடும்பத் தேவையை நிறைவேற்றுவீர்கள். வழக்கு விவகாரத்தில் சமரச தீர்வு கிடைக்கும்.

## தனுசு
கிரகங்கள் ஆதாயபலன் தருவர். திட்டங்களை நடைமுறைப்படுத்துவீர்கள். பிறரிடம் எதிர்பார்த்த உதவி ஓரளவு கிடைக்கும். வீடு வாகனத்தில் உரிய பாதுகாப்பு வேண்டும். குடும்ப விஷயங்களை பிறரிடம் சொல்ல வேண்டாம். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள்.

## கடகம்
நற்பலன் கிடைக்கும் வகையில் கிரகங்கள் தொழிற்படுகின்றன. பணிகளில் நிதானம் இருக்கும். பிறர் கருத்தை செவிமடுக்கவும். வெளியூர் பயணத்தால் பயன் உண்டு. வழக்கு விவகாரத்தில் அனுகூலமான முடிவு கிட்டும். குடும்ப ஒற்றுமை வளரும்.

## மகரம்
திட்டமிட்ட பணிகள் குறித்த காலத்தில் நிறைவேறும். சகோதரர்களின் உதவி கிடைக்கும். வாகனப் பயன்பாட்டைக் குறைக்கவும். சொத்தில் பெறுகின்ற பலனை கவனமுடன் பாதுகாக்கவும். உடல் ஆரோக்கியம் சீராகும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

## சிம்மம்
கிரகங்கள் ராஜயோக பலனை வழங்குவர். காரியாலய வேலைகளில் மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். புதியவர்களின் உதவி கிடைக்கும். வாகனப் பயன்பாட்டை அளவுடன் வைத்திருக்கவேணும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும்.

## கும்பம்
கிரகங்கள் வியத்தகு நற்பலனைத் தருவர். திட்டமிட்ட பணிகள் நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும். சுற்றுலாவில் ஆர்வம் கொள்வீர்கள். பிள்ளைகள் பெற்றோரின் வழிகாட்டுதல்களை முழு மனதுடன் ஏற்றுக்கொள்வர்.

## கன்னி
தாராள நன்மை ஏற்படும் வாரம். தாமதமான பணிகள் புதிய முயற்சியால் நிறைவேறும். அனைவரிடமும் பாசமுடன் பழகுவீர்கள். புதியவர்களின் உதவி கிடைக்கும். வீடு வாகனத்தில் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். பிள்ளைகள் ஆன்மிகத்தில் ஈடுபடுவர்.

## மீனம்
தெய்வ வழிபாட்டால் நன்மை உண்டு. உடன்பிறந்தவர்கள் அதிக அன்பு பாராட்டுவர். சொத்தின் பேரில் கடன் பெற வேண்டாம். உடல் ஆரோக்கியம் பலம்பெறும். மனைவி வழிசார்ந்த உறவினர்களுக்கு உதவுவீர்கள். வியாபாரத்தில் அபிவிருத்தி செய்வீர்கள்.





கோண்டாவில் தென்மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட 12 லட்சம் ரூபா நிதி மூலம் அரைக்கும் ஆலை ஒன்று கோண்டாவில் உப்புமடம் சந்தியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.



முல்லைத்தீவு கேப்பாப்புலவு மக்களின் போராட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக மாணவர்களும் இணைந்து கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.



ஈரோஸ் புரட்சி அமைப்பின் மீளாளுமைக் கூட்டமும் தேசிய ரீதியிலான கட்டமைப்பும் சில தினங்களுக்குமுன்னர் திருகோணமலை சம்பூர் கலாசார மண்டபத்தில் மீள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது






1000 ரூபாய் சம்பள உயர்வைக் கோரி அது தொடர்பான போராட்டங்களில் ஈடுபட்டுவரும் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஸ்ரீபாதக் கல்வியியற் கல்லூரியில் கல்விபயிலும் மாணவர்கள் ஆதரவளித்துப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

# பார்வை ஒன்றே போதும்



ஒரு காட்டில் ஒரு துறவி ஒருவர் அமர்ந்திருந்தார். அவருக்குப் பார்வை கிடையாது. அந்த வழியாக வந்த ஒருவன் " ஏ கிழவா, இந்த வழியாக சற்று முன் யாராவது சென்றார்களா? என்று அதிகாரத்தோடு கேட்டான். அதற்குத் துறவி , "இதற்கு முன் இந்த வழியாக யாரும் சென்றதாகத் தெரியவில்லை," என்றார். சிறிது நேரத்தில் மற்றொருவன் வந்து, " ஐயா, இதற்கு முன் யாராவது இப்பக்கமாகச் சென்றார்களா? என்று கேட்டான். அதற்கு அத்துறவி, சற்று முன் இந்த வழியாகச் சென்ற ஒருவன் இதே கேள்வியைக் கேட்டு விட்டுச் சென்றான்." என்றார். மேலும் சிறிது நேரம் கழித்து இன்னொருவன் வந்தான். அவன் "துறவியாரே, வணங்குகிறேன். இதற்கு முன்பு இந்த வழியாக யாராவது செல்லும் சத்தம் தங்களுக்குக் கேட்டதா? தயவு செய்து கூறுங்கள்" என்று பணிவோடு வினவினான். உடனே துறவி, " மன்னர் பெருமானே, வணக்கம். இந்த வழியாக முதலில் ஒரு வீரன் சென்றான். அடுத்து ஓர் அமைச்சர் சென்றார். இருவருமே நீங்கள் கேட்ட இதே கேள்வியைத்தான் கேட்டனர்." என்றார். மிகவும் வியந்து போனான் அரசன், "துறவியாரே, தங்களுக்குப் பார்வை இல்லை. அப்படி இருந்தும் நான் அரசன் என்றும், முன்னால் சென்றவர்கள் வீரன், அமைச்சர் என்றும் எப்படி அறிந்தீர்கள்?" என்று கேட்டான். "அரசே, இதைக் கண்டறிய பார்வை தேவையில்லை. அவரவர் பேசுவதை வைத்தே அவர் யார், அவர் தகுதி என்ன என்பதை எல்லாம் அறிய முடியும்." முதலில் வந்தவர் சிறிதும் மரியாதையின்றி கேள்வி கேட்டார். அடுத்து வந்தவர் பேச்சில் அதிகாரம் தெரிந்தது. ஆனால் தாங்களோ மிகவும் பணிவாகப் பேசுகிறீர்கள்." என்று விளக்கினார் அந்த பார்வையற்ற துறவி...!




## ஆத்திசூடி அறிவோம்

1. நீர்விளை யாடேல் - வெள்ளத்தில் நீந்தி விளையாடாதே.
2. நுண்மை நுகரேல் - நோயைத் தரும் சிற்றுண்டிகளை அதிகமாக உண்ணாதே.
3. நூல்பல கல் - அறிவை வளர்க்கும் பல நூல்களைப் படி.
4. நெற்பயிர் விளை - நெற்பயிரை விளையச் செய்வதை உன் வாழ்க்கை தொழிலாகக் கொண்டு வாழ்.
5. நேர்பட வொழுக - ஒழுக்கந் தவறாமல் நேர்வழியில் நட.



## கொஞ்சம் தமிழ் கற்போம்




**நிறுத்தற் குறிகள்(தொடர்ச்சி)**

அ) முற்றுப்புள்ளி :

1. சொற்றொடரின் இறுதியில் முற்றுப்புள்ளி இடப்படுகின்றது.

எடுத்துக்காட்டு :

நீ உள்ளே வா.

2. சுருக்கச் சொற்களுக்கும் எழுத்துக்களுக்கும் முற்றுப்புள்ளி இட வேண்டும். எடுத்துக்காட்டு :(அ) திரு. மணி. திருநாவுக்கரசு. (ஆ) திரு. திரு.வி.க.

3. பட்டப் பெயர்களுக்குப்பின் முற்றுப்புள்ளி இடவேண்டும்.

எடுத்துக்காட்டு :

திரு. இ. செழியன், க.மு.

ஆ)வினாக்குறி :

வினாச் சொற்றொடர்களின் இறுதியில் இடப்படுகின்றது.

எடுத்துக்காட்டு : பாடுபட்டால் பயன் இல்லாமல் போகுமா? சொற்றொடருக்கு நடுவில் கேள்விக்குறி வரக்கூடாது. 'நீங்கள் யார் என்று அவர் கேட்டார்' என்னும் சொற்றொடரில் யார் என்ற சொல்லுக்குப் பின்னால் வினாக்குறி கண்டிப்பாக இருக்கக்கூடாது.

## குறள் தரும் சேதி



குறள் 91:

**இன்சொலால் ஈரம் அளை**
**இப் படிறுஇலவாம்**
**செம்பொருள் கண்டார்வாய்ச்**
**சொல்.**

**மு. வரதராசன் உரை:**

ஒருவர் வாயிலிருந்து வரும் சொல் அன்பு கலந்ததாகவும், வஞ்சனையற்றதாகவும், வாய்மையுடையதாகவும் இருப்பின் அதுவே இன்சொல் எனப்படும்.

**மு. கருணாநிதி உரை:**

அன்பு கலந்து வஞ்சம் அற்றவைகளாகிய சொற்கள், மெய்ப்பொருள் கண்டவர்களின் வாய்ச்சொற்கள் இன்சொற்களாகும்.

# அட அப்படியா?

## சீனப் பெருஞ்சுவர்



கி.மு. 208 ஆம் ஆண்டு கிங் வம்சத்தினால் ஆரம்பித்துவைக்கப்பட்ட சீனப் பெருஞ் சுவர் அமைக்கும் நடவடிக்கை கி.மு. முதலாம் நூற்றாண்டில் ஹான் வம்சத்தினாலும் கடந்த 1138 ஆம் ஆண்டு தொடக்கம் 1198 ஆம் ஆண்டு வரையான 10 வம்சங்களினதும் 5 அரசுக்களின் காலங்களிலும் கடந்த 1368 ஆம் அண்டு மிங் வம்சத்தினாலும் சீனப் பெருஞ் சுவர் அமைக்கப்பட்டு விஸ்தரிக்கப்பட்டது.

பல நூற்றாண்டுகளாக இடம்பெற்ற சீனப் பெருஞ் சுவரின் கட்டுமாண பணியின் போது 20 தொடக்கம் 30 இலட்சம் மக்கள் இறந்திருக்கக்கூடுமென கணிக்கப்படுகிறது. சீனப் பெருஞ் சுவரானது காடுகள் , பாலைவனங்கள், மலைப்பிரதேசங்கள் பனியுறை பிரதேசங்கள் என சீனாவின் சகல எல்லைகளையும் உட்படுத்தி நிற்கிறது.

## விடுகதை நேரம்



1. பூவோடு பிறந்து நாவோடு கலந்து விருந்தாவான் மருந்தாவான். அவன் யார்?
2. முத்துக்கோட்டையில் சிறைப்பட்டிருக்கும் மகாராணி. யார் அவள்?
3. எடுக்க எடுக்க வளரும் எண்ணெய் கண்டால் படியும். அது என்ன?
4. பூ பூக்கும் காய் காய்க்கும் ஆனால் பழம் பழுக்காது. அது என்ன?
5. உணவை எடுப்பான . ஆனால் உண்ண மாட்டான். அவன் யார்?

பதில்கள்
1.தேன் 2. நாக்கு
3.முடி 4. தேங்காய்
5.அகப்பை

# அடிப்பகுதியில்லாத ஆழத்திற்குள் மூழ்கி எழுதல்



ஒரு சமயம் ஒரு திருடன் ஒரு துறவியிடம் சரணடைவதற்கு விரும்பி வந்தான். ஆனால் திருட்டுத் தொழிலைக் கைவிட விரும்பவில்லை. திருடன் முழுமையான விழிப்புணர்வுடன் திருட வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் அவனை வழிநடத்த துறவி முன் வருகிறார். திருடுவது தனது பழக்கம், என்பதால் திருடன் அது மிகவும் எளிதான நிபந்தனை என்று ஏற்றுக்கொண்டான். ஆனால் அவனது அடுத்த திருட்டுச் சாகசத்திற்காக அவன் தயாரானபோது, அவன் துறவியின் நிபந்தனையை நினைவு கூர்ந்தான். தனது செயலைப் பற்றிய விழிப்புணர்வுடன் இருந்ததால் அவனால் திருட முடியவில்லை.

துறவியின் ஆசீர்வாதம் காலப்போக்கில் குறைந்து விடும் என்று திருடன் கருதினான். ஆனால் ஒரு கணிசமான காலத்திற்குப் பிறகும் கூட, ஒரு வீட்டிற்குள் திருடுவதற்காக பிரவேசிக்க முயற்சிக்கும் தருணத்தில் துறவியின் ஆலோசனையை விழித்துணர்ந்ததால் அவனால் திருட முடியவில்லை. இதுதான் விழிப்புணர்வின் சக்தி. இதனால் மிக உயர்ந்த மாற்றத்தை கொண்டு வர முடியும்.

எல்லாத் தவறுகளும் விழிப்புணர்வற்ற நிலையிலேயே நிகழ்கின்றன. விழிப்புணர்வுடன் இருக்கும்போது ஒருவரால் கோபமடைய முடியாது, புகார் செய்ய அல்லது தவறு செய்ய முடியாது. உடலுடன் சுயத்தைத் தொடர்புகொண்டு நிலைநிறுத்தும்போது, அத்தகைய ஒரு விழிப்புணர்வு, உடல் மற்றும் மன நிலைக்கு அப்பால் உண்மையான இருப்பாக அமையப் பெறுகிறது.

ஆன்மிகத்தை தேடும் நபரின் வாழ்க்கையில் குரு நுழைகையில், உயர்ந்த சுய விழிப்புணர்வு மலர்கிறது. குரு வெறும் தகவல்களை மட்டும் தருவதில்லை ஞானம் தேடுவோரின் உயிர்நாடியை ஊக்குவிக்கிறார். குரு என்பது ஓர் தத்துவம் அது குருவின் உடலளவில் மட்டும் அல்லது கருத்தியலாக மட்டும் கருதப்படுபவை அல்ல.

இது தான் நாம் இருப்பு (சாந்நித்தியம்) என்று அழைப்பது. இந்த விழிப்புணர்வு நிலைமையில் அனைத்துக் குறைகளும் புகார்களும் மறைந்து போய் விடுகின்றன. நன்கு கவனித்துக் கொள்ளப்படும் ஒரு ஆழமான உணர்வுடன் ஒருவர் செயல்பட முடிகிறது. இது அடிக்கடி கேட்கப்படும் கேள்விக்கு நம்மை எடுத்து வருகிறது. அந்த இருப்புடன் நாம் எவ்வாறு தொடர்பு கொள்வது? இருப்பு உணர்வைத் தூண்டக்கூடிய ஒரு குருவை எப்படி கண்டுபிடிப்பது? இது ஒரு சவாலாகும், மேலும் அவரவரின் உள்ளுணர்வை மட்டுமே நம்ப முடியும். சோதித்தறியும் தகுதிகள் எதுவுமில்லை. தகுதியானவர்கள் நம்பகமானவர்கள்அவர்கள் விலகுவதில்லை; விலையுயர்ந்தவர்களாயுமில்லை.

ஏக்கம் உள்ளே ஆழமாக எழுகிறது என்றால், குரு ஒருவரின் வாழ்க்கையில் தோன்றுவார். ஒருவன் குருவை நோக்கி ஒரு படி எடுத்து வைத்தால், குரு பத்து அடிகள் முன்னெடுத்து வைப்பார். ஆனால் அந்த ஒரு படி எடுக்கப் பட வேண்டும். குருவை நோக்கி நெருக்கமாகி செல்லும் நிலை மிகவும் கவர்ச்சியானது. மேலும் புதுமை, அதிக ஞானம் மற்றும் அதிக அன்பு ஏற்படுகிறது. இது அடிப்பகுதியே இல்லாத ஒரு ஆழம் போல் இருக்கின்றது

இத்தகைய முடிவில்லாத, நிபந்தனையற்ற தொடர்பு பாரம்பரியத்தில்தான் நாம் குரு பூர்ணிமாவைக் கொண்டாடுகிறோம்.

# இயேசு சொன்ன உவமைகள்: கடைசி இடத்தில் அமருங்கள்



“ஒருவர் உங்களைத் திருமண விருந்துக்கு அழைத்திருந்தால், பந்தியில் முதன்மையான இடத்தில் அமராதீர்கள். ஒருவேளை உங்களைவிட மதிப்பிற்குரிய ஒருவரையும் அவர் அழைத்திருக்கலாம்.

உங்களையும் அவரையும் அழைத்தவர் வந்து உங்களிடத்தில், ‘இவருக்கு இடத்தை விட்டுக்கொடுங்கள்’ என்பார். அப்பொழுது நீங்கள் வெட்கத்தோடு கடைசி இடத்திற்குப் போக வேண்டியிருக்கும். நீங்கள் அழைக்கப்பட்டிருக்கும்போது, போய்க் கடைசி இடத்தில் அமருங்கள்.

அப்பொழுது உங்களை அழைத்தவர் வந்து உங்களிடம், ‘நண்பரே, முதல் இடத்திற்கு வாரும்’ எனச் சொல்லும்பொழுது உங்களுடன் பந்தியில் அமர்ந்திருப்பவர்கள் யாவருக்கும் முன்பாக நீங்கள் பெருமை அடைவீர்கள். தம்மைத்தாமே உயர்த்துவோர் யாவரும் தாழ்த்தப் பெறுவர் தம்மைத்தாமே தாழ்த்துவோர் உயர்த்தப்பெறுவர்.”

பிறகு தம்மை விருந்துக்கு அழைத்தவரிடம் இயேசு, “நீர் பகல் உணவோ இரவு உணவோ அளிக்கும் போது உம் நண்பர்களையோ, சகோதரர் சகோதரிகளையோ, உறவினர்களையோ, செல்வம் படைத்த அண்டை வீட்டாரையோ அழைக்க வேண்டாம். அவ்வாறு அழைத்தால் அவர்களும் உம்மைத் திரும்ப அழைக்கலாம். அப்பொழுது அதுவே உமக்குக் கைம்மாறு ஆகிவிடும்.

மாறாக, நீர் விருந்து அளிக்கும்போது ஏழைகளையும் உடல் ஊனமுற்றோரையும் கால் ஊனமுற்றோரையும் பார்வையற்றோரையும் அழையும். அப்போது நீர் பேறு பெற்றவர் ஆவீர். ஏனென்றால் உமக்குக் கைம்மாறு செய்ய அவர்களிடம் ஒன்றுமில்லை. நேர்மையாளர்கள் உயிர்த்தெழும்போது உமக்குக் கைம்மாறு கிடைக்கும்” என்று கூறினார்.

இயேசுவின் இந்த போதனை, நேரடியான உவமையாக இல்லாமல் ஒரு அறிவுரை போல வந்திருக்கிறது. பந்திகளில் முதன்மையான இடத்தைப் பிடிக்க வேண்டும் என முண்டியடித்த மக்களைக் கண்ட இயேசு பொதுப்படையாக இந்த அறிவுரையைச் சொல்கிறார். அது ஆன்மீகச் செறிவான அறிவுரையாய் அமைந்திருக்கிறது.

அந்தக் காலத்தில் யூதர்கள் விருந்துக்கு தங்கள் நண்பர்கள், உறவினர்கள், உடன் வேலையாட்கள், பெரிய மனிதர்கள் போன்றவர்களை அழைப்பதுண்டு. ஆங்கில யூ வடிவிலான மேஜையில் அவர்கள் வந்தமர்வார்கள். விருந்துக்கு அழைத்தவரின் வலப்பக்கமும் இடப்பக்கமும் இருப்பது மிகப்பெரிய கவுரவமாய் பார்க்கப்பட்டது. கடைசி இடத்தில் இருப்பது, குறைவானதாகக் கருதப்பட்டது. இந்த சூழலில் தான் இயேசு இந்த அறிவுரையைச் சொல்கிறார்.

# இறைவன் தரும் சோதனைகளின் பொழுது...



மனிதர்களைப் படைத்த இறைவன், மனிதர்கள் நன்றியுள்ளவர்களாக நடந்து கொள்கிறார்களா என்பதற்காகவும், எந்நிலையிலும் அவனை மட்டுமே சார்ந்திருக்கிறார்களா என்பதற்காகவும், அவர்களை, பல வழிகளில் சோதித்துப் பார்க்கிறான்.

நமக்கு அருளியுள்ள பொருட்செல்வத்தின் மூலமாகவும், குழந்தைச்செல்வத்தின் மூலமாகவும் நம்மை, நம் நம்பிக்கையைப் பரிசோதிக்கிறான். இச்செல்வங்கள் குறைவாகக் கொடுக்கப்பட்டிருப்பது மட்டுமல்ல, நிறைவாகக் கொடுக்கப்பட்டிருப்பதும் சோதனைதான்.

செல்வம் குறைவாகக் கொடுக்கப்பட்டவர்கள், தங்கள் வறுமை நிலையிலும் இறைவன் தங்களுக்கு அளித்திருப்பவைகளைக் கொண்டும், தங்கள் மீதான இறைவனின் கருணை குறித்தும் திருப்தி கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். தங்களின் முழு நம்பிக்கையையும் இறைவனின் மீதே வைத்து தங்களின் வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும்.

இன்னும் இறைப்பொருத்தத்தை வேண்டி தங்களால் முடிந்த நல்ல காரியங்களை செய்யக்கூடியவர்களாக இருக்க வேண்டும். இல்லை, இல்லை என்று குறைபட்டுக்கொண்டிருப்பவர்களின் வாழ்க்கை என்றுமே நிறைவாக இருக்காது என்பதுடன், அவர்கள் நிம்மதி இன்றித் தவித்துக் கொண்டிருப்பர்.

செல்வம் ஒருவருக்குக் கொடுக்கப்பட்டிருப்பது மற்றவர் பார்வைக்கு பெரிதாகத் தோன்றலாம். ஆனால் செல்வம் கொடுக்கப்பட்டவர்களுக்கு இறைவனின் கேள்விக்கணக்கு அதிகமாக இருக்கும். இறைவன் அளித்தவற்றிலிருந்து, இறைவனின் பாதையில் செலவழிக்காதவர்களுக்கு தண்டனை கடுமையாக இருக்கும்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு தனித்துவமான ஓர் அமைப்பாக வட்டதாகே

சப்னா இக்பால்
(யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை உதவி விரிவுரையாளர்)









இலங்கைக் கட்டடக் கலையை மதம் சார்பானது என்றும் மதம் சார்பற்றது என்றும் இரண்டு வகையாக வகுத்து நோக்க முடிகின்றது. இவ்வகையே மதம் சார் கட்டடங்களுள் ஸ்தூபி முக்கியம் பெறுவதைக் காணலாம். தூபியுடன் இணைந்த கலைவடிவமாகவே வட்டதாகே என்ற கட்டடமுறை காணப்படுகின்றது. இது இலங்கைக்கே உரித்தான தனித்துவமான கட்டட முறையாக கொள்ளப்படுகின்றன. இவ்வட்டதாகேயானது தாகே, தூபகர,சைத்தியகர,போன்ற பெயர்களினால் அறியப்படுகின்றன. இது வட்ட - எச்ச - மனைகள் எனப் பொருள் கொள்ளப்படுகின்றன. அனுராதபுரம், பொலனறுவையிலுள்ள திருமனைகளை குறிக்க உபயோகிக்கப்பட்ட சொல்லே வட்டதாகே என வரலாறுகள் கூறுகின்றன.பௌத்த வழிபாட்டு முறையின் பொருட்டு தூபி அமைப்பு கொண்டுவரப்பட்டது. இதற்குஅடிப்படையினை இந்திய ஸ்தூபிகட்டட முறையில் இருந்து எடுத்துக் கொண்டாலும் அவற்றோடு ஒன்றா கவட்டதாகே இலங்கைக்கு உரித்தானதாகக் கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஸ்தூபியோடு இணைந்ததாக விளங்கும் இக்கட்டடமானது ஸ்தூபிகளினை வெயில், மழை போன்ற அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட கட்டட முறைமையாகும். வட்டவடிவதள அமைப்பினைக் கொண்டமைந்துள்ள.இதனை நிர்மாணிப்பதற்காக மரம், செங்கல், கல் போன்றன ஊடகங்களாக பயன்படுத்தப்பட்டன. இலங்கையிலே முதன்மை பெற்ற வட்டதாகேயாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். அவையாவன தூபராம, லங்காராம, மிஹிந்தலை, பொலனறுவை, மெதிரிகிரிய, அத்தனகல, ராஜாங்கன, தம்னித்தென போன்றனவாகும். இவற்றுள் அனுராதபுர தூபராம வட்டதாகேயும் பொலனறுவை மெதிரி கிரியாயும் வட்டதாகே அமைப்புக்கு சிறந்த உதாரணங்களாகும்.

மேலும் வட்டதாகேயின் அமைப்பு முறையினை நோக்கும் போது உயர்ந்த மேடையின் மேல் இவை அமைக்கப்படுகின்றன. இம் மேடையினைச் சுற்றிவர மூன்று அல்லது இரண்டு வரிகளில் தூண்கள் கொண்டுவரப்படும். இத்தூண்களினால் தாங்கப்படுவதாக கூரை அமைப்பு கொண்டுவரப்படும். இது ஒரு வகையில் அரை வட்ட வடிவிலான Dome அமைப்பிலானதாக காணப்படும். இவ் உயர்வானமேடையானது வட்ட வடிவிலானதாக காணப்படும். சில இடங்களில் ஒன்று அல்லது இரண்டு தளங்களைக் கொண்டதாக இருக்கும். பொலனறுவையிலுள்ள வட்டதாகே 2 தளங்களைக் கொண்டது. உள் தளங்களிலுள்ள தூண்கள் உயரமானதாக காணப்படும்.

வட்டவடிவிலான உயர்ந்த மேடையில் செங்கல்லினை சுவர்கள் கட்டப்பட்டு மறைக்கப்பட்டிருக்கும். உட்சுவர் பகுதியானது சிலவேளைகளில் ஓவியம் தீட்டப்பட்டு காணப்படும். பொதுவாக வட்டதாகேயில் 04 நுழைவாயில்கள் காணப்படுவதுடன் இங்கு கொண்டுவரப்பட்டுள்ள தூண்கள் தாமரைவடிவிலான போதிகையினை கொண்ட கற்தூணாக காணப்படுகின்றன. இவை இலங்கைக்கே உரிய தனித்துவப் பண்புகளை வெளிக்காட்டி நிற்பதாகவுள்ளன. நுழைவாயில் பகுதி சந்திரவட்டக்கல், படிவரிசை, காவற்கல், கொறவக்கல் ஆகியனவற்றை உள்ளடக்கிய அழகியல் பூர்வமானதாக அமைக்கப்பட்டு காணப்படுகின்றன.

அவ்வகையே இலங்கையின் மிகப் பழமையான வட்டதாகேயாக அனுராதபுரத்திலுள்ள தூபராமய வட்டதாமனை காணப்படுகின்றது. தூபராமய என்ற சிறிய ஸ்தூபியைப் பாதுகாப்பதற்காகவே இக்கட்டட அமைப்பு கொண்டுவரப்பட்டுள்ளது. வட்டவடிவிலான மேடையின் நடுப்பகுதியில் ஸ்தூபி கொண்டு வரப்பட்டு இதனைச் சூழ 88 தூண்கள் வரிசைகளாக கொண்டு வரப்பட்டுள்ளன. இத்தூண்கள் கூரையைதாங்குவதாகவும் உள்ளன. இங்கு கொண்டுவரப்பட்டுள்ள தூண்களில் சிற்ப வேலைப்பாடுகளினை (விலக்குருக்கள், கொடியலங்காரங்கள்) கொண்டுவரப்பட்டுள்ளன.

இவ்வட்ட தாமனை வசபன்மன்னனது ஆட்சிக் காலப்பகுதியில் (67-111AD) கட்டப்பட்டது. இதுவே ஏனைய வட்டதாமனைகளுக்கான அடிப்படையாகவும் விளங்குகின்றது. இங்கு ஒரு நுழைவாயில் மட்டுமே காணப்படுகின்றன. தூபராமய வட்டதாமனையானது வட்டதாகையின் ஆரம்ப வளர்ச்சியினை காட்டுவதாக பொலனறுவைக் கால வட்ட தாகைகளும் காணப்படுகின்றன. இவையும் வட்டதாகேயினது அனைத்து அம்சங்களினையும் கொண்டிருப்பதுடன் அலங்கார பூர்வமானதாகவும் காணப்படுகின்றது. இது ஒருவகையில் இலங்கை கட்டடக்கலையின் வளர்ச்சியினை எடுத்துக் காட்டுவதாக உள்ளன. பொலநறுவையில் நான்கு நுழைவாயில்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இவ் நான்கும் ஒரே மாதிரியானவை. அங்குள்ள தூண்கள் செதுக்கல் வேலைப்பாடுகளை கொண்டவை. தாமரை வடிவிலான போதிப் பகுதி கொண்டுவரப்பட்டுள்ளன. இங்குள்ள உயர்வான மேடைப் பகுதியில் கல்வேலி போன்ற அமைப்பு காணப்படுகின்றது. இது இந்திய தூபிகளைச் சுற்றியுள்ள கல்வேலிகளினை ஞாபகப்படுத்துவதாக உள்ளன. வட்டதாமனையைப் பற்றி H.C.P பெல் அவர்கள் கூறுகையில்

"இக் கட்டடமானது பழங்கால பௌத்த கட்டடக்கலையைப் பிரதிபலிக்கும் சிறந்தகட்டடம் என்றும் சிறிய ஸ்தூபியினை கட்டப்பட்டது என்று Rajavalya, Poojavaliya ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

இவற்றினைத் தொகுத்து நோக்கும் போது வட்டதாகேயானது ஸ்தூபியை பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டிருப்பினும் கட்டடத்தின் பகுதிகளான தூண்கள்,நுழைவாயில், கூரை அமைப்பு, சிலைகள் என்ற அனைத்து அம்சங்களினையும் உள்ளடக்கிய கலைத்துவம் மிக்க கட்டடமாக இது விளங்குகின்றதுடன் இலங்கை கட்டடக் கலை வளர்ச்சியின் ஓர் தனியடையாளமாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 5ஆம் திகதி இலங்கைக்கு கிரக மாற்றமா?

## சட்ட ரீதியாகத் தீர்க்கப்படவில்லையெனில் நிச்சயம் தெருக்களில் ரத்தக்களரி ஏற்படும் - சபாநாயகர் கரு ஜெயசூரியா

## நல்லாட்சி நன்றாகவே இல்லை - தினேஷ் குணவர்த்தன

எதிர்வரும் 5ஆம் திகதி இலங்கைக்கு என ஒரு கிரகமாற்றம் நடைபெறப் போகிறது. அன்று பலருக்கு வெள்ளி திசையும், சிலருக்கு ஏழரையும் வேறு சிலருக்கு அட்டமத்துச் சனியும், சிலருக்கு ஐந்தாம் இடத்துக்குச் சனி பகவானின் நகர்வும் இடம்பெறவிருக்கிறது. இந்தக் கிரகமாற்றம் சாதாரணமாக இருக்கப்போவதில்லை. அன்றிலிருந்து பாரதூரமான முடிவுகள் எடுக்கப்படவிருக்கிறது. வரவிருக்கும் அதிரடி நடவடிக்கைகளுக்குத் தயாராக மக்கள் இருக்க வேண்டும். என்று ஆருடம் சொல்கிறேன் என்று எண்ணுகிறீர்களா?

தற்போது ஏற்பட்டிருக்கும் உள்ளூர் அரசியல் நிலைமைகள் எம்மை அப்படித்தான் சிந்திக்க வைக்கிறது. இப்படியானதொரு அதிரடி நிலைமைகளை மக்கள் எண்ணிப் பார்க்கவில்லை. இதை ஓர் அரசியல் நெருக்கடியாகப் பார்க்க வேண்டாம் என்று புத்தி ஜீவிகள் அறிவுறுத்துகிறார்கள்.

இதே சமயம் 29.10.2018 இந்து தமிழ் இணையப் பத்திரிகையானது "இலங்கை அரசியல் நெருக்கடியால் பெரும் ரத்தக்களறியே ஏற்படும்: அந்நாட்டு பாராளுமன்ற சபாநாயகர் கடும் எச்சரிக்கை" என கீழ்க்காணும் ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறது.

இலங்கை அரசியலின் பெரும் நெருக்கடி உடனடியாக அரசியல் சட்ட ரீதியாகத் தீர்க்கப்படவில்லையெனில் நிச்சயம் தெருக்களில் ரத்தக்களரி நிலையே ஏற்படும் என்று அந்நாட்டு நாடாளுமன்ற சபாநாயகர் கரு ஜெயசூரியா எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்றத்தைக் கலைத்ததை உடனடியாக வாபஸ் பெற்று உறுப்பினர்கள் இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் உடனடியாகச் செயல்படுமாறு ஜனாதிபதி மைதிரிபால சிறிசேனாவுக்கு கரு ஜெயசூரியா வலியுறுத்தியுள்ளார்.

"நாடாளுமன்றம் மூலம் இதற்குத் தீர்வு காண வேண்டும், தெருக்களுக்கு இட்டுச் சென்றால் பெரிய ரத்தக்களறியைத்தான் சந்திக்க வேண்டி வரும்" இன்று கொழும்பில் செய்தியாளர்களிடன் ஜெயசூரியா தெரிவித்தார்.

ரணில் விக்ரமசிங்க பதவியை அநாவசியமாகப் பறித்து



ராஜபக்ஷவை நியமித்ததால் அங்கு பெரிய அரசியல் நெருக்கடி ஏற்பட்டுடுள்ளது. ஆகவே ரணில் தன் பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் நிரூபிக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்று சிறிசேனவை அவர் வலியுறுத்தியுள்ளார்.

விக்ரமசிங்கவும், "தற்போது







பெரும் வெற்றிடமே உள்ளது, நாட்டை யாரும் ஆளவில்லை. எனவேதான் நாடாளுமன்றத்தைக் கூட்டி உடனடியாக எனக்கு இருக்கும் ஆதரவை நிரூபிக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்று கோருகிறேன். நான் தான் இன்னமும் பிரதமராக இருக்கிறேன், எனக்குத்தான் பெரும்பான்மை உள்ளது." என்று தெரிவித்துள்ளார்.

இதேவைளை 17 செப்ரெம்பர் 2017 அன்று வெளிவந்த - வாராந்த ஊடகமொன்றுக்கு நேர்காணல் வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன நல்லாட்சி அரசாங்கத்தை மேற்கின் அடிருவடி என விமர்சித்துள்ள அதேவேளை அவர்களால் நாட்டுக்குப் பெரும் ஆபத்து என்றும் சொல்லிக் கவலை தெரிவித்திக்கிறார்.

தொடர்ந்தும் கருத்தை வெளியிட்ட அவர் இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவில் நம் நாட்டுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பிரேரணையின் இணை அனுசரணையாளராக மாறிய போதே நம்நாட்டுக்குச் சனி பிடிக்கத் தொடங்கிவிட்டது.

அதன் காரணமாகவே இன்று போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகள், வெளிநாட்டு நீதிபதிகள் போன்ற விடயங்கள் தலைதூக்கியுள்ளன. மறு புறத்தில் அதற்கான சாட்சியாளர்களையும் தயார்படுத்துகின்ற செயற்பாடு களும் தந்திரோபாய முறையில் மேற்கொள்ளப்படுகின்றன. இராணுவத் தளபதியாகவிருந்த ஜகத் ஜயசூரியாவிற்கு எதிராகச் சரத் பொன்சேகா சாட்சியம் அளிக்கத் தயாராக இருப்பது அவ்வாறான செயற்பாடுகளின் பிரதிபலிப்பே ஆகும்.

இந்த அரசாங்கம் நாட்டைப்பற்றிச் சிந்திப்பதை விடுத்து மேற்கு நாடுகளைத் திருப்திப்படுத்துவதை மட்டுமே சிந்திக்கின்றது. அதன் காரணமாகவே எமது நாட்டின் இராணுவத்தினர் சர்வதேச விசாரணைகளுக்குட்படுத்தப்படும் அபாயம் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது.

ஆளுங்கட்சியின் மிக முக்கிய பொறுப்புகளை ஐ.தே.க வசம் ஒப்படைத்துள்ளதால் ஜனாதிபதியை மீறி நாட்டுக்குப் பாதகமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பௌத்த தேரர்களையும், இராணுவத்தினரையும் விமர்சித்த சரத் பொன்சேகா அமைச்சரவையில் இன்னும் இருக்கிறார்.

தற்போதைய நிலையில் அரசாங்கம் அனைத்துத் துறைகளிலும் தோல்வியைத் தழுவியுள்ளது. எனவே கூட்டு எதிர்க்கட்சிக்குப் பிரகாசமான எதிர்காலம் உள்ளது. எதிர்வரும் தேர்தல்களில் அதனைத் தெளிவாக உணரக்கூடியதாக இருக்கும் என்றும் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். - என அந்தச் செய்தியில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு இறைமையுள்ள ஜனநாயக நாட்டில் அரசியல் தொடர்பான நடவடிக்கைகளை பிற நாடுகள் தான் தீர்மானிக்கின்றதென்ற குற்றச்சாட்டு அவ்வப்போது இலங்கைமீது வைக்கப்படுகின்றது. ஆனால் மைத்திரி தானாகவே தீர்மானித்துச் செயற்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

எதிர்வரும் 5ஆம் திகதி கூடவிருக்கின்ற நாடாளுமன்றத் தில் அதிகப்படியான வாக்குகளால் தனது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளப்போவது யார் என்பது பற்றிப் பல ஆருடங்கள் சொல்லப்பட்டுவருகின்றன. யார் வந்தாலும் ஒரு புதிய சதுரங்க விளையாட்டு அன்று தொடங்கும் என்பது நிட்சயம். அந்த விளையாட்டில் மக்களாகிய பங்கு எது என்பதுதான் எமக்குத் தெரியவில்லை. •

## காசி ஆனந்தனின் குறுங்கதைகள்

# புடம்



காட்டில் இருந்த மூங்கில் ஒருநாள் கத்தியால் வெட்டப்பட்டது. நெருப்புக் கம்பி தன்னைத் துளைத்தபோது "ஐயோ! உடல் புண்ணாகிறதே.." என்று கதறி அழுதது.

"கொஞ்சம் பொறுமையாக இரு .." என்று மூங்கிலைப் பார்த்து ஆறுதல் சொன்னது காற்று.

மூங்கில் புல்லாங்குழல் ஆனது.

மேடையில்.....

உலகமே மயங்கும் இசையை அள்ளிப் பொழிந்து கொண்டிருந்த புல்லாங்குழலைப் பார்த்து மேனி சிலிர்த்தது காற்று.

அது சொன்னது ...

"புண்பட்டவன் பண்பட்டவன்"

# தேவை



புல் மேய்ந்து கொண்டிருந்தது மாடு.

மரத்தில் இருந்த குருவிக் குஞ்சு தாயைக் கேட்டது - "ஏனம்மா மாட்டுக்கு நம்மைப்போல் சிறகுகள் இல்லை?" தாய்க்குருவி சிரித்தது.

"மாட்டுக்கு நம்மைப்போல் சிறகுகள் தேவை இல்லை" என்றது தாய்.

தாய்க்குருவி சொன்னது -
வானத்தில் புல்லு முளைத்தால்
மாட்டுக்கும் சிறகு முளைக்கும்.

# நிறைவு



நகைக்கடைக் கண்ணாடிப் பெட்டியில் கண்ணைப் பறித்த இரத்தினக்கல்லை பார்த்துத் தெருவில் கிடந்த குறுணிக்கல் பொறாமைப்பட்டது.

"எனக்கு ஏன் மதிப்பில்லை.? நானும் ஒரு கல் தானே....! " என்று ஓலமிட்டது.

தெருவோரத்தில் கிடந்த கடப்பாரை சொன்னது --

"ஏ, குறுணி! காலம் முழுவதும் உன்னை நீயே பெரிதாக எண்ணிக்கொண்டு பலரும் பார்க்க தெருவில் கிடக்கிறாய். ஆனால், இரத்தினக்கல் அப்படியா? நிறைந்து வளர்ந்து இரத்தினமாகும்வரை வெளியில் தலைகாட்டியதே இல்லை. எங்கோ மண்ணின் மறைவில் இது தன்னைத்தானே உருவாக்கிக் கொண்டிருந்தது."

"அப்படியென்றால்....?" என்று இழுத்தது குறுணிக்கல்.

கடப்பாரை சொன்னது -

"நிறைவாகும்வரை மறைவாக இரு"

# குனிவு

குனிந்த தலை குனிந்தபடியே மூட்டை சுமந்து செல்லும் கழுதையை வேம்பில் இருந்த காக்கைகள் கவனித்து வந்தன.

ஒரு நாள் காககைகளில் ஒன்று மற்றதைப் பார்த்து , "உனக்கு இந்தக் கழுதைமேல் இரக்கம் வரவில்லையா? எப்போது பார்த்தாலும் மூட்டை சுமந்து துன்பப்படுகிறதே..." என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டது.

"நாம் என்ன செய்ய முடியும்? கழுதைதான் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும்." - என்றது மற்றக் காக்கை.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

இறக்கைகளைக் கோதிக் கொண்டே இரண்டாம் காக்கை சொன்னது -

"குனிந்து கொண்டே இருப்பவன்
சுமந்து கொண்டே இருப்பான்"



# இடம்

கழுதையும் பட்டாம் பூச்சியும் உலாப்போயின.

மைதானத்தில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள்

"இந்த இடத்தில்தான் நான் கச்சேரி வைப்பேன் - இங்கே எனக்கு வரவேற்பிருக்கும் .." என்றது கழுதை.

அது பாடத் தொடங்கியது.

என்ன கொடுமை... கழுதைக் கச்சேரி. - கலாட்டா கல்வீச்சு என்றாகியது.

அப்படியே கழுதையும் பட்டாம் பூச்சியும் ஊரின் எல்லையில் சாயந்து கிடந்த ஒரு குச்சு வேலியின் அருகில் வந்து சேர்ந்தன.

கழுதைக்கு ஒரே கொண்டாட்டம்.

ஓணான்கள் வரிசையாக அங்கே வேலியில் உட்கார்ந்து தலையை ஆட்டிக்கொண்டிருந்தன. கழுதை மகிழ்ச்சியோடு பாடத்தொடங்கியது.

என்ன ஆச்சரியம்!

தலையை ஆட்டி எல்லோரும் கச்சேரியை இரசித்துக் கொண்டிருந்தார்கள்.

வியப்போடு அசைவற்று நின்ற பட்டாம்பூச்சியைப் பார்த்து ஒரு வண்டு

"ஒன்றும் வியப்படையாதே.... இங்கே அப்படித்தான்" - என்று கூறியது.

சுருக்கமாக அது சொன்னது -

"ஓணான்களின் ஊரில்
கழுதைகளும்
வித்துவான்களே"



தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்

# 40 ஆகவில்லை 40 பிள்ளைகள்



வயது 39தான். ஆனால் பிள்ளைகள் தொகை 44. அதிர்ச்சியான தகவல்தான். உகண்டாவைச் சேர்ந்த இந்தப் பெண்ணுக்கு ஒரு கணவன்தான்! பிறந்த 44 பிள்ளைகளில் ஆறு இறந்து விட்டன. சரி எப்படி இது சாத்தியப்படுகின்றது? மூன்று மூன்று குழந்தைகளாக நாலு தடவைகளும், நான்கு நான்காக மூன்று தடவைகளும், ஆறு தடவைகள் இரட்டைக் குழந்தைகளையும் பெற்றுள்ள இவள் பெயர் மரியம் நபாரான்ஸி. கம்பிமிரி என்ற உகண்டாவின் குக் கிராமந்தான் இவள் பிறந்த இடம்.

12 வயதில் திருமணமாகி விட்ட இவள் மாற்றாந்தாயின் கொலைமுயற் சியிலிருந்து தப்பியவள். கண்ணாடியைப் பொடியாக்கி, சாப்பாட்டிற் குள் கலந்து கொடுத்திருக் கிறாள் அந்தக் கொடுமைக் காரி! உணவைச் சாப்பிட்ட நான்கு பிள்ளைகள் இறந்து விட்டாலும், சாப்பாட்டு நேரம் வெளியில் போயிருந்த இவள் உயிர் தப்பியிருக்கிறாள். 1993இல் திருமணமான இவளது கணவன் பல தாரங்களை மணந்தவன். திருமணமாகி ஒரு வருடத்தில் இவளுக்கு இரட்டைக் குழந்தைகள். இவள் ஆறாவது தடவையாக பிள்ளை பெற்றபோது, மொத்தக் குழந்தைகள் 18ஆகி விட்டன. 23 வயதில் 25 குழந்தைகள். உடல்நிலை பாதிக்கப்படும் என்ற காரணம் காட்டி, குழந்தை பிறப்பதைத் தடை செய்ய மருத்துவர் அனுமதிக்கவில்லை. 25 வருட மணவாழ்க்கையின் பின்னர், கணவன் இவளை விட்டுவிட்டு ஓடிப்போய்விட்டான். .இவளது பெரிய பிள்ளைகள்தான், சிறிய பிள்ளைகளை வளர்க்க உதவி வருகின்றன.

ஓட்டங்களை ஆடிக் குவிக்கும் "ஓட்ட யந்திரம்" கோலிதான் ஞாபகத்திற்கு வருகிறார்.

# அருவருப்பான உணவுகளுக்கு அருங்காட்சியகமா?

ஒருவருக்கு அருவருப்பான உணவு இன்னொருவருக்கு நல்ல சுவையானதாக இருக்கலாம். நாயை யும்,குரங்கையும், பாம்பையும் ரசித்து ருசித்துச் சாப்பிடும் நாடுகள் இருக்கின்றன. எமது கண்களுக்கோ அவை அருவருப்பானது. சாப்பிட்டுபவருக்கோ அவை சுவையானவை. விரும்பத்தகாத உணவுகளுக்கு ஒரு அருங்காட்சியகத்தை மல்மோ என்ற சுவீடனின் மூன்றாவது பெரிய நகரில் ஒக்டோபர் 31 அன்று திறக்கிறார்கள். அப்படி என்னதான் உணவுகள் கண்காட்சிக்கு இருக்கப் போகின்றன.?




துர்நாற்றம் வீசும் துரியான் என்ற தாய்லாந்தின் பழம், (சிங்கப்பூரில் இந்தப் பழத்தை பொதுஜன வாகனங்களில் கொண்டு செல்லத் தடை. அந்த அளவுக்கு நாற்றம் ), ஐஸ்லாந்தில் பெரிதும் விரும்பப்படும் அழுகிய சுறா, ஒரு மாட்டின் ஆணுறுப்பு, புழுக்களிலிருந்து தயாரிக்கப்படும் ஒரு வகை சீஸ் -இவை காட்சிக்கு வரப்போகும் "அருவருப்பான" உணவுகளில் ஒருசில! ஜனவரி 2019வரை இந்தக் கண்காட்சி திறந்திருக்கும். ஏற்கனவே றொறன்ரோ(கனடா), லொஸ் ஏஞ்சல்ஸ் ஆகிய நகரங்களில் பிரபல்யமாக உள்ள கண்காட்சியகங்களை அறிமுகப்படுத்திய மருத்துவர் சாமுவேல் வெஸ்ட் என்பவர்தான் இதையும் அறிமுகப்படுத்துகிறாராம். இவரின் அடுத்த குறி சீனாவின் ஷங்காய் நகர் என்கிறார்கள்.

நுழைவுக் கட்டணம் நமது பணத்தில் சுமாராக 3500 ரூபாய்!

ஆயிரங்கள் கொடுக்க வைத்து அருவருப்புகளை ஆசையோடு பார்க்க அழைக்கிறார்கள்.




வான்வெளியில் ஒரு சந்திரன் ஒரு சூரியன் என்று ஆட்சி நடந்து கொண்டிருக்கும்போது, இந்தச் சந்திரனுக்குப் போட்டியாக இன்னொரு சந்திரன் பிரகாசிக்கப் போவது, இந்த வாரத்தின் தலைப்புப் புதினம். என்ன நம்பச் சிரமமாக இருக்கின்றதா? எல்லா விடயங்களிலும் மார்தட்டி பல வளர்ச்சிகளை உலகுக்குக் காண்பித்துக் கொண்டிருக்கம் சீனாதான், இந்த இரண்டாவது சந்திரனை விரைவில் ஆகாய வெளியில் உலாவவிடப் போகின்றது.

2020இல் இந்தச் செயற்கைச் சந்திரன் தயாராகி விடும் என்று நம்மை ஆச்சரியப்படுத்துகிறது சீனா. இது வந்து விட்டால், தெருவிளக்குகள் "வேலையில்லாப் பட்டதாரிகளோடு" சேர்ந்து விடும் என்கிறார்கள். இது உமிழும் வெளிச்சம், நகர்ப்புறங்களில், மின்சாரச் செலவு களைக் குறைக்கப் போகின்றது என்ற நல்ல செய்தியை யும் தருகிறார்கள். சீனாவின் தென் மேற்குப் பிராந்தியத் திலுள்ள செங்டூ என்ற நகரமே இந்த ஏற்பாட்டுக்கு தயாராகி வருகின்றது. நிஜமான சந்திரனை விட இது உமிழும் ஒளி , எட்டு மடங்கு அதிகமாக இருக்கும் என்கிறது "சைனா டெய்லி' என்ற தினசரி!

இந்தப் பிராந்தியத்தில் சிச்சுவான் என்ற இடத்திலுள்ள செய்மதிகளை ஏவும் நிலைய அதிபர் இது பற்றித் தெரிவிக்கையில், இந்த முதல் பரிசோதனை வெற்றியளித்தால், 2022 இல் மேலும் மூன்று "சந்திரன்கள்" விண்வெளிக்கு ஏவப்படும் என்கிறார். முதல் சந்திரன் வெறும் பரிசோதனைக்குரியதாகவே இருந்தாலும், அதைத் தொடர்பவை, வர்த்தகரீதியான அனுகூலங்களை வெளிப்படுத்தும் என்கிறார் இவர். 90களில் பூமிக்கு ஒளிய்ய அனுப்புவதில் ரஷ்யாவும் ஒரு தடவை முயற்சித்திருப்தாகக் கூறப்படுகின்றது. விஞ்ஞானத்தின் அசுர வளர்ச்சி, நம்மை திக்குமுக்காட வைக்கிறதல்லவா?

இப்பொழுது அடிமடியிலும் கைவைத்து விட்டார்களோ?

# கலகலப்பூட்டும் பொம்மைக் குடியேற்றம்

ஜப்பானில் 10,000க்கு மேற்பட்ட பட்டினங்களிலும், கிராமங்களிலும், குடியிருப்பே இல்லை என்பது உங்களுக்குத் தெரியுமா?. ஜப்பான் நாட்டில் தீவுகள் அதிகம். அதில் ஒரு தீவுதான் 'ஷிகொக்கு' தீவு (Shikoku). இந்தத் தீவில், 'நகோரோ' (Nagoro) என்ற கிராமம் உள்ளது. . ஒரு காலத்தில் நூ ற்றுக்கணக்கான மக்கள் இங்கு வசித்தனர். ஆண்டுகள் செல்லச் செல்ல தங்களின் ஜீவாதாரத்தைத் தேடி நகரங்களுக்கு இடம்பெயர்ந்துவிட்டனர். தற்போது அந்தக் கிராமத்தில், ஓய்வீதியம் பெறுபவர்களும், வயதானவர்களுமாக 35 பேர் அளவில்தான் வசிக்கிறார்கள்.

இதே கிராமத்தைச் சேர்ந்த அயனோ சுகிமி என்ற பெண்ணும் அப்படித்தான் ஒசாகா நகரக்குச் சென்றார். சில ஆண்டுகள் கழித்து, தன் சொந்தக் கிராமத்திலுள்ள 87 வயதுத் தந்தையைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையில் திரும்பிவந்தார். ஆனால், ஏறத்தாழ மக்கள் நடமாட்டமே இல்லாமல் கிராமம் வெறிச்சோடிக் கிடந்ததைப் பார்த்த 67வயது சுகிமிக்கு அதிர்ச்சி! மனிதர்களைப் போல் பொம்மைகளைத் தயார் செய்யத் தொடங்கினார். அவற்றுக்கு வண்ணம் தீட்டி, ஆடைகள் உடுத்தி,



பஸ் தரிப்பு நிலையம், சந்தை, சாலை ஓரங்கள் எங்கும் அந்தப் பொம்மைகளை வைத்தார். மாணவர்களே இல்லாத அந்தக் கிராமத்தில்,4 வருடங்களுக்கு முன்பு பள்ளிக்கூடம் மூடப்பட்டு விட்டது. . அதனால், பள்ளி அறைகள் சுகிமி தயாரித்த பொம்மை மாணவர்களால் அலங்கரிக்கப்பட்டன. மாணவர்கள் படிப்பதுபோலவும் டீச்சர் பாடம் நடத்துவதுபோலவும் பொம்மைகள் அழகாகக் காட்சிப்படுத்தினார். இதுவரை 350 பொம்மைகளைத் தயார்செய்துள்ளார். சுகிமி தயாரித்துள்ள பொம்மைகளைக் காணச் சுற்றுலாப் பயணிகள் அந்தக் கிராமத்துக்கு வந்து குவிகின்றனர். இழந்த களை மீண்டும் கிராமத்திற்குக் கிடைக்கின்றது.

எதையும் செய்வாள் பத்தினி?

# ஸ்மார்ட் உலகப் புரட்சியாளன் அம்ரோ



பிரெஞ்சுப் புரட்சியைச் சித்திரிக்கும் லிபர்டி ஓவியம் நினைவிருக்கிறதா? போர்க்களத்தில் மேல்சட்டை களைந்த நிலையில் பெண் ஒருவர் கைகளில் கொடியுடன் மக்களை முன்னின்று வழிநடத்தும் ஓவியம் அது. அந்த ஓவியத்தைச் சுதந்திரத்துக்கான (Liberty) அடையாளம் என்பார்கள். ஓவியத்தில் பெண்ணின் கைகளில் இருந்த அந்தக் கொடிதான் பின் நாளில் பிரான்ஸ் நாட்டின் கொடியானது. பிரெஞ்சு புரட்சியைச் சித்திரிக்கும் அந்த லிபர்டி ஓவியத்துடன் பலஸ்தீனக் கொடியுடன் இருக்கும் இளைஞரின் புகைப்படத்தை ஒப்பிட்டு இணையப் பதிவர்கள் பகிர்ந்து வருகின்றனர்.

மேலும் சிலர், ஹ கோலியாத்தை தாவிது எதிர்த்துப் போரிடும் காட்சி' என்று வர்ணிக்கின்றனர். முதலில் இந்தப் புகைப்படம் எந்தச் சூழலில் யாரால் எடுக்கப்பட்டது என்பதைத் தெரிந்துகொள்ளலாம்...

காஸா...

அன்றாடம் செய்திகளில் இடம்பெறும் ஒரு பெயர். பலஸ்தீன நகரான காஸ ாவின் எல்லைப் பகுதியில் துப்பாக்கிச்சூட்டின் சத்தங்கள் ஒலித்துக்கொண்டே இருக்குமாம். 1948 ஆம் ஆண்டு பலஸ்தீனத்தில் நடந்த போரில் அந்நாட்டு மக்கள் அகதிகளாகச் சிதறிச் சென்றனர். இஸ்ரேல் என்னும் சுதந்திர நாடு நிர்மாணிக்கப்பட்டது. அந்தச் சமயத்தில் அகதிகளாகப் பிற பகுதிகளுக்குத் துரத்தப்பட்ட பலஸ்தீனியர்களின் உரிமைகளை மீட்பதற்காகத்தான் காஸா - இஸ்ரேல் எல்லையில் இன்றுவரை போராட்டம் தொடர்கிறது.

2014 ஆம் ஆண்டு காஸா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. அந்தப் போரில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். அந்தப் போருக்குப் பிறகு காஸாவில் இயங்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இராணுவத்துக்கும் இடையேயான மோதல் உக்கிரமானது. இது ஒருபுறம் இருக்க காஸா மக்களும் தங்கள் முன்னோர்களின் உரிமைகளை மீட்க, அதாவது, இஸ்ரேலின் எல்லையில் உள்ள நிலங்களை மீட்கப்போராட்டத்தில் குதித்துவிட்டனர். கடந்த ஏழு மாதங்களாகப் போராட்டத்தின் தீவிரம் அதிகரித்துவிட்டது. இஸ்ரேல் இராணுவமும் வான்வழித் தாக்குதல்களை அடிக்கடி நிகழ்த்தி உயிர்களைப் பலிகொண்டு வருகிறது.

'காஸா எல்லைப் பகுதியில் தற்போது இஸ்ரேலாக இருக்கும் பகுதியில் உள்ள தங்கள் முன்னோர்களின் நிலங்களைத் திருப்பி தர வேண்டும். அந்தப் பகுதிகளுக்குள் செல்ல மூதாதையர்களை அனுமதிக்க வேண்டும்' என்பதே போராட்டக்காரர்களின் கோரிக்கை. காஸா மீது நடத்தப்படும் வான்வழித் தாக்குதல்களுக்கு இஸ்ரேல் தரப்பில் கூறப்படும் காரணம் ஒன்றே ஒன்றுதான். 'நாங்கள் தீவிரவாதத்துக்கு எதிராகத்தான் தாக்குதல் நடத்துகிறோம்.'

இப்போது அந்த வைரல் புகைப்படத்துக்கு வருவோம். அதை வைரல் புகைப்படம் என்று கூறி சிறுமைப்படுத்திவிட முடியாது. அதற்குப் பின்னால் பெரிய வரலாறே உள்ளது. கண்களில் ஒருவித வெறியுடன் கைகளில் கொடியுடன் சீறிவரும் அந்த இளைஞனின் பெயர் ஹஅம்ரோ.' முழுப்பெயர் அருட் அபூ அம்ரோ Ared Abu Amro. 20 வயதான இவர் இஸ்ரேலுக்கு எதிரான போராட்டத்தில் கொடியைப் பிடித்துக்கொண்டு கல்வீச்சு நடத்தியபோது எடுக்கப்பட்ட புகைப்படம் அது. ஒக்ரோபர் 20 ஆம் திகதி துருக்கி ஊடகத்தின் புகைப்படக் கலைஞர் முஸ்தஃபா ஹஸ்வானா என்பவரால் எடுக்கப்பட்டது. அந்தப் புகைப்படத்தை யூசப் என்பவர் ட்விட்டரில் பகிர்ந்திருந்தார்.

மங்கலான கரும் புகை பின்னணியில், கூரிய புருவங்களைச் சுருக்கி எதிரே உள்ள இஸ்ரேல் இராணுவத்தின் மீது கல்லை வீசுகிறார் அம்ரோ. மேல் சட்டைக் கிடையாது, ஒரு கையில் கொடி, மற்றொரு கையில் கற்களை வீச உதவும் ஸ்லிங்ஷாட் ஸ்விங். பின்புறத்தில் உள்ளவர்கள் பாதுகாப்பு உடைகளுடன் களத்தில் இருக்க அம்ரோ மேல் சேர்ட்கூட இல்லாமல் போராட்டத்தில் ஈடுபடுகிறார்.

Aljazeera ஊடகம் அம்ரோவைத் தேடிப்பிடித்து இந்தப் புகைப்படம் குறித்துக் கேட்டுள்ளது. அதற்கு அவர்... "யார் போட்டோ எடுத்தது என்றெல்லாம் எனக்குத் தெரியாது. அங்கு புகைப்படக்காரர்கள் இருந்தார்களா என்பதுகூட தெரியாது. நான் வழக்கமாக போராட்டத்தில் கலந்துகொள்வேன். எங்கள் உரிமைகளுக்கான போராட்டம் இது.

"ஒரு கையில் கொடியுடன் ஏன் போராட்டத்துக்கு வருகிறாய். கைகளில் கொடியுடன் கற்களை வீசுவது சிரமம்' என்று என் நண்பர்கள் என்னிடம் கேட்பார்கள். ஒருவேளை நான் போராட்டக்களத்தில் கொல்லப்பட்டால், என் நாட்டுக் கொடியை என் உடலில் சுற்றி என் உயிரற்ற உடலை அப்புறப்படுத்துங்கள் என்பேன் அவர்க்ளிடம்" என்று கூறியிருக்கிறார்.

அம்ரோ புகைப்படத்தைப் பகிர்பவர்கள் அந்த இளைஞரை மிகைப்படுத்துகிறார்கள்' என்று சிலர் விமர்சனங்களையும் வீசுகின்றனர்.

- அஷ்வினி

# நரகாசூரன்கள் கொண்டாடிய தீபாவளித் திருநாள்

அபிஷேகா

யாழ். போதனா வைத்தியசாலையில் 1987 ஒக்ரோபர் 21 அன்று இந்திய இராணுவம் நடத்திய கோரவெறித் தாக்குதலில் 21 வைத்தியசாலைப் பணியாளர்கள் உட்பட 68 பேர் உயிரிழந்தனர். இச்சம்பவத்தை நேரில் பார்த்தவர் - பாதிக்கப்பட்டவர் கீற்று இணையத்தில் எழுதிய கட்டுரை இங்கே பிரசுரமாகிறது.

(கடந்த வாரத் தொடர்ச்சி)

கோட்டையிலிருந்த இராணுவம் நகருக்குள் முன்னேறி வந்துவிட்டதாக எல்லோரும் பேசிக்கொண்டனர். நான் அப்பா இருந்த அலுவலக அறைக்குச் சென்றேன். அங்கு அப்பாவுடன் எனக்கு அடுத்த தம்பியும் கடைசித்தம்பியும் இருந்தனர். அப்பா என்னை அம்மாவுடன் நிற்குமாறு கூறினார். நான் அம்மாவிடம் வந்து விட்டேன். அம்மாவும் நானும் மூன்றாவது தம்பியும் நண்பனும் பிரியாவும் கதிரியக்க கட்டிடப்பகுதிக்குள் நின்று கொண்டிருந்தோம். அம்மா மூன்றாவது தம்பியுடன் மாடிப்படியில் இருந்தார். நான் நண்பனுடன் கதைத்துக் கொண்டிருந்தேன். அங்கிருந்த எல்லோரும் பயத்துடன் என்ன நடக்குமோ என பேசிக் கொண்டிருந்தனர்.

கிட்டத்தட்ட நான்கு மணியளவில் திடீரென துப்பாக்கி வேட்டுக்களின் சத்தம் மிக அண்மையில் கேட்கத் தொடங்கியது. வைத்தியசாலை வளாகத்திற்குள் நுழைந்த இராணுவம் நாம் இருந்த பகுதியை நோக்கிச் சுட்டுக்கொண்டு வந்தது. எல்லோரும் சத்தமிட்டவாறே ஆளுக்காள் தள்ளுப்பட்டுக் கொண்டு ஓடினார்கள், நோயாளர்கள் செய்வதறியாது கத்தினார்கள். தம்பிக்கு பக்கமாக இருந்த சுவரில் துப்பாக்கிவேட்டு ஒன்று பட்டுத் தெறித்தது. இராணுவம் வைத்தியசாலைக்குள் வந்தால் அவர்களுடன் பேசலாம் என நம்பிக்கையுடன், வைத்தியசாலைச் சீருடையணிந்து முன்னுக்கு நின்ற பணியாளர்கள் பிணங்களாகச் சரிந்து கொண்டிருந்தார்கள்.

தம்பியை இழுத்துக் கொண்டு வந்த அம்மா என்னை கதிரியக்கப் பகுதிக்கு எதிர்ப்பக்கம் தள்ளிவிட்டார். நானும் நண்பனும் ஒரு அறைக்குள் செல்ல, பின்னுக்கு வந்த அம்மாவும் தம்பியும் அறைக்குள் நுழைய முயற்சித்தனர். அது முடியாமல் போக எதிர்ப்பக்கமாக இருந்த அறைக்குள் செல்ல எத்தனித்தார், அதுவும் முடியவில்லை. உடனே அந்தக் கொறிடோரில் விழுந்து படுத்து விட்டனர். அதேசமயம் அந்த இடத்தில் வீழ்ந்து வெடித்த கைக்குண்டில் பிரியா காயமடைந்து விழுந்தாள். தொடர்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் வைத்தியசாலை வளாகத்தை அதிர வைத்துக் கொண்டிருந்தன. ஐயோ! ஐயோ! என்ற கூக்குரல்கள் முருகா! முருகா! நல்லூரானே! அம்மாளாச்சி காப்பாற்று காப்பாற்று என எல்லா குலதெய்வங்களையும் கதறி அழைத்துக் கொண்டிருந்தார்கள். மேலும் 'வி ஆர் சிவிலியன்ஸ், வி ஆர் சிவிலியன்ஸ்' என்ற சத்தங்களும் பலமாகக் கேட்டுக் கொண்டிருந்தன. மக்களின் கதறல்கள் எதையும் செவிமடுக்காத 'அமைதிப்படையின்' கொலை வெறியாட்டம் ஒரு மணித்தியாலமாகத் தொடர்ந்து கொண்டிருந்தது.

**யாழ்.மருத்துவமனை**

ஒரு மணித்தியாலத்தின் பின் மக்களின் அழுகுரல் சத்தங்கள் சற்று அடங்கிக்கொண்டு போக, துப்பாக்கிச் சத்தமும் அடங்கிக் கொண்டு போனது. அந்தி சாய்ந்து, இருள் கவிழ்ந்தது. கீழ்த்தளப்பகுதியில் உள்ளவர்கள் கொல்லப்பட்டுவிட்டதாக எண்ணியிருந்தனரோ என்னவோ! அங்கு படையினர் நடமாட்டம் குறைந்து, மேல்மாடியில் வைத்தியர்கள் தங்கும் பகுதியில் படையினரின் நடமாட்டம் கூடுதலாக இருந்தது. அத்துடன் அங்கிருந்து வெளிப்பகுதியை நோக்கி சுட்டுக்கொண்டிருந்தனர். இந்தியப்படையின் கிந்தி உரையாடல்கள் இராணுவ சப்பாத்துச் சத்தங்களைத் தவிர, வளாகத்தில் மயான அமைதி நிலவியது. எங்களுக்கு வெளியே என்ன நடந்தது என்று தெரியவில்லை, என்ன செய்வதென்றும் புரியவில்லை. கொறிடோர்ப் பகுதியில் இருந்த அம்மாவுக்கும் தம்பிக்கும் என்ன நடந்தது! காயமடைந்த பிரியா எப்படியிருக்கின்றார்! அப்பாவுக்கு என்ன நடந்தது! அப்பாவுடன் இருந்த தம்பிகளுக்கு என்ன நடந்தது! எந்தக் கேள்விகளுக்கும் விடை தெரியாமல் பயத்தில் உறைந்து போய் இருந்தோம்.

அங்கிருந்து வெளியேறிச் செல்ல முடியாது. இடையிடையே கேட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் காதைப் பிளந்தன. அறை வாசலில் இருந்து மெதுவாக தலையை நீட்டி கோறிடோரில் இருந்த அம்மாவும் தம்பியும் எப்படியிருக்கிறார்கள் என்று பார்த்தேன். இருட்டில் ஒன்றும் தெரியவில்லை. அந்த இடத்தில் பலர் படுத்திருந்தார்கள். எல்லோருமே பிணங்களுடன் பிணங்களாகப் படுத்திருந்தனர். சத்தமாகவும் பேசமுடியாது. மெதுவாக இது அம்மாவா? தம்பியா? என தவழ்ந்து சென்று விசாரித்தேன். பக்கத்திலிருந்தவர்கள் 'சத்தம் போடாமல் படுத்திரு, அசைவு தெரிந்தால் சுடுவாங்கள்' என்று சொன்னதால் எனது தேடலைத் தொடர முடியவில்லை. அப்படியே படுத்தேன், மனது வலித்தது. ஒவ்வொரு நிமிடமும் கனமாக இருந்தது.

கிருஷ்ண பகவான், கொடூர குணம் கொண்ட நரகாசுரனை வதம் செய்து மக்களைக் காப்பாற்றிய நாளை, இந்தியதேசம் தீபாவளித் திருநாளாகக் கொண்டாடும் தினத்தில் நிகழ்ந்தது இந்தக் கொடூரம். அங்கு மக்களைக் காப்பாற்ற கிருஷ்ணன் வரவில்லை. இந்திய அமைதிப்படை உருவத்தில் வந்த நரகாசுரனிடமிருந்து தங்களைக் காப்பாற்ற முருகா! முருகா! என மக்கள் கத்தியழைத்த போதும் முருகன் வரவில்லை. அன்று நரகாசுரனாக வந்த இந்திய அமைதிப்படை தனது கொலைவெறியை நிறைவேற்றி எங்கள் கண்ணீரில் அந்தத் தீபாவளியைப் பதிவு செய்தது.

நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. மக்களிடையே மயான அமைதி. இராணுவத்தின் குரல்கள் மட்டும் இடையிடையே பலமாக கேட்டுக் கொண்டிருந்தன. அந்த மயான அமைதிக்குள் 'ஐயோ என்னைக் காப்பாற்றுங்கோ! என்னைக் காப்பாற்றுங்கோ!' என்ற ஒரு பெண்ணின் அவலக்குரல் போராடி ஓங்கி ஒலித்து பின்னர் தளர்ந்து அடங்கிக்கொண்டிருந்தது. அந்த அவலக்குரலைத் தாண்டிக் கேட்ட இராணுவச் சிப்பாய்களின் வெறிக்கூச்சல்கள் கட்டிடத்தை அதிரவைத்தன. எல்லோரும் கொல்லப்பட்டு விட்டார்களா? என்பதை அடிக்கடி சுற்றி வந்து உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்பது இடையிடையே கேட்ட புட்ஸ் சத்தங்கள் மூலம் உணர முடிந்தது. அதனால்தான் அதிலிருந்தவர்கள், சத்தம் போட வேண்டாம் கதையாதைங்கோ! என மற்றவர்களை கட்டுப்படுத்தினார்கள். அந்த இரவின் நிசப்தத்தில், பெற்றோர்கள் எங்கே? தம்பிகள் எங்கே? என்ன நடந்திருக்கும்? என்ற கேள்விகள் மனதை மேலும் மேலும் குடைய நண்பனுடன் மட்டும் பகிர்ந்து கொண்டு படுத்திருந்தேன்.

நாங்கள் கொறிடோரின் முடிவுப்பகுதிக்கு சற்றுமுன்னால் இருந்த அறை வாசலில் இருந்தோம். அக்கொறிரோடில் பலர் கொல்லப்பட்டிருந்தனர். பலர் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை அவர்களின் முனகல் சத்தங்களை வைத்துப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. நடு இரவில் ஒருவர் 'வீ ஆர் சிவிலியன்ஸ் பிளீஸ் டோன்ற் கில் அஸ்' என சத்தமாகக் கூறினார். சிறிது நேரத்தில் மேல்மாடியிலிருந்து இராணுவம் நடந்துவரும் சத்தம் கேட்டது. அதைத்தொடர்ந்து குரல் வந்த பகுதியை அதிரவைத்த குண்டு சத்தமும் தொடர்ந்து கேட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தமும் அமைதியைக் குலைத்தன. அதன் பின்னர் அந்த மனிதரின் சத்தம் கேட்கவேயில்லை. பலர் காயப்பட்டு சிகிச்சையின்றி இறந்தனர். சிலர் இரத்தம் போக தண்ணீர் கேட்டு முனகிக் கொண்டிருந்தார்கள். காயப்பட்டு மரணத்தின் விளிம்புக்குச் சென்று கொண்டிருந்தவர்கள் தங்களின் உயிரைக் காப்பாற்றலாம் என்ற ஆதங்கத்திலே அல்லது சுயநினைவின்றியோ காப்பாற்றுமாறு எழுப்பிய அபயக்குரல் அவர்களின் ஆத்மாவிற்கு விடைகொடுத்துக் கொண்டிருந்தது. இடையிடையே துப்பாக்கிச்சத்தங்கள் பல தடவைகளாகக் கேட்டுக் கொண்டிருந்தன. ஒவ்வொரு தடவையும் ஏதோ ஒரு உயிர் பறிக்கப்படுகின்றது என்பதை மட்டும் உணரக்கூடியதாக இருந்தது. யார் இறந்து விட்டார்கள், யார் யார் இறந்து கொண்டிருக்கின்றார்கள், தப்புவோமா! என்பது எதுவும் தெரியாமல் கழிந்தது அந்த இரவு.

மறுநாள், மரணத்தின் கணங்களுடன் விடிந்தது காலைப்பொழுது. மோசமான இரத்த வாடையும் வெடிமருந்தின் மணமும் காற்றில் பரவி நின்றன. அம்மாவும் தம்பியும் எங்காவது கண்ணில் தென்படுகின்றார்களா? என எட்டிப்பார்த்தபோது கொறிடோரின் முடிவில் அம்மாவும் தம்பியும் வேறு சிலரும் படுத்திருந்தது தெரிந்தது. காயப்பட்ட பிரியா அம்மாவிற்கு முன் படுத்திருந்தார். அவர்களுக்கு முன்னுள்ளவர்கள் கொல்லப்பட்டிருந்தனர். சிலர் காயத்துடன் கிடந்தனர். எல்லோரும் பிணங்களுடன் பிணங்களாகவே கிடந்தனர்.

(அடுத்த வாரமும் வரும்)

## இறைவன்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தைகள் இல்லாமலிருப்பது ஒரு சோதனை என்றால், குழந்தைகள் இருப்பதும் சோதனையாகத் தான் நம் மீது ஏவப்பட்டுள்ளது. எத்தனையோ பெற்றோர்கள் தாம் பெற்ற குழந்தைகளால் மனம் வெறுத்து, நொந்து போயிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம்.

இது மட்டுமின்றி அருட் கொடையாக இறைவன் வழங்கிய குழந்தைகளை தாங்கள் என்றுமே எதிர்பார்த்திராத ஒரு தருணத்தில் இழந்து தவிக்கும் பெற்றோர்களையும் நாம் பார்க்கிறோம்.

நம் செல்வத்தை இழந்தாலும் சரி அல்லது எல்லா செல்வங்களுக்கும் மேலான குழந்தைகளை இழந்தாலும் சரி, நாம் பொறுமையை மேற்கொண்டால் நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் உயர்ந்த கூலி உண்டு என்பதை அல்லாஹ் தன் திருமறையில் வாக்களிக்கிறான்.

இன்னும் இப்படிப்பட்ட இழப்புகளின் போது இவ்வுலக வாழ்வில் அனைத்தும் அழியக்கூடியவையே என்றும், என்றுமே நிலையான செல்வம் அவனிடமே உள்ளன என்பதை நாம் அறியக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

"நிச்சயமாக, 'உங்கள் செல்வமும், உங்கள் குழந்தைகளும் (உங்களுக்குச்) சோதனையாக இருக்கின்றன. நிச்சயமாக அல்லாஹ்விடத்தில்தான் மிகவும் உயர்ந்த நற்கூலி உண்டு' என்பதை நீங்கள் நன்கு அறிந்து கொள்ளுங்கள்". (திருக்குர்ஆன் 8:28).

பொருட்சேதம், உயிர்சேதம், நோய், விபத்து போன்ற எண்ணற்ற சோதனைகளை நாம் சந்திக்க நேரிடுகிறது. அதுவும் நாம் எதிர்பார்க்காத நேரத்தில் இவை ஏற்படுவது இறைவனின் புறத்தில் இருந்து, அவன் நாடுவதால்தான் நிகழ்கிறது.

இத்தகைய சோதனைகளின் போது யார் ஒருவர் பொறுமையுடனும், இறைவனிடம் உதவி தேடிக்கொண்டும் இருக்கிறாரோ அவருக்கு அல்லாஹ் நற்கூலியை வழங்குகிறான்.

"(நம்பிக்கையாளர்களே!) பயம், பசி மேலும் பொருள்கள், உயிர்கள், கனிவர்க்கங்கள் ஆகியவைகளைக் கொண்டு நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம். (நபியே! இச்சோதனைகளால் ஏற்படும் கஷ்டங்களைச்) சகித்துக் கொண்டிருப்பவர்களுக்கு நீங்கள் நற்செய்தி கூறுங்கள்". (திருக்குர்ஆன் 2:155).

"(சோதனைக்குள்ளாகும்) அவர்கள் தங்களுக்கு எத்தகைய துன்பம் ஏற்பட்டபோதிலும், "நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்காகவே இருக்கின்றோம். நிச்சயமாக நாம் அவனிடமே மீளுவோம்" எனக் கூறுவார்கள்". (திருக்குர்ஆன் 2:156).

இன்னும் அல்லாஹ் தன் திருமறையில், சோதனைகளில் வெற்றி பெறுபவர்களுக்கு தன்னிடம் மகத்தான கூலி உள்ளதாகக் கூறுகிறான்.

மனிதர்கள் பலவீனமானவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். இந்த பலவீனத்தை சைத்தான் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவே முற்படுவான்.

சோதனைகளின் போது மனிதர்களின் மனதில் வீணான எண்ணங்களை உருவாக்கி, இறைவனுக்கு மாறுசெய்யத் தூண்டுவான். நிராசையை ஏற்படுத்துவான். இன்னும் இறைவனின் மீதுள்ள நம்பிக்கையை சிதைத்து, நிந்திக்கத் தூண்டுவான்.

இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் ஒரு மனிதன், 'இந்த சோதனை என் இறைவனிடம் இருந்தே வந்துள்ளது, இதில் எனக்கு நிச்சயமாக ஒரு நன்மையை நாடியிருப்பான்' என்று உறுதியாக நம்பி, 'நாம் இறைவனிடம் இருந்தே வந்திருக்கிறோம், இன்னும் அவனிடமே திரும்பிச்செல்ல வேண்டியிருக்கிறது' என்றும், 'நான் இழந்ததற்கு ஈடாக அதைப் போன்றோ அல்லது அதை விடச் சிறந்ததை எனக்குத் தருவதற்கு என் இறைவனே போதுமானவன்' என்று அவனிடமே தன்னையும், தன்னுடைய காரியங்களையும் ஒப்படைத்து விட்டு பொறுமையுடன் காத்திருப்பது இறைவனுக்கு மிகவும் உவப்பைத் தரும்.

மேலும், வேறொரு வெகுமதியின் மூலம் அந்த மனிதருக்கு நிம்மதியையும், மகிழ்ச்சியையும் இறைவன் தருவான், இன்ஷாஅல்லாஹ். இப்படிப்பட்ட மனிதர்கள் இறைவனின் சோதனையில் தேர்ச்சி பெற்று விட்டார்கள் என்று கொள்ளலாம்.

'உங்களுடைய பொருள்களும், உங்களுடைய சந்ததிகளும் (உங்களுக்கு) ஒரு சோதனையாகவே உள்ளன. (இச்சோதனையில், நீங்கள் தேர்ச்சி பெற்றால் உங்களுக்கு) அல்லாஹ்விடத்தில் மகத்தான கூலி இருக்கின்றது' (திருக்குர்ஆன் 64:15).

சோதனைகள் ஏற்படும் காலங்களில் நபிமார்களையும், இறுதித்தூதர் நபி (ஸல்) அவர்களையும், அவர்களின் தோழர்களையும், அவர்களுக்கு ஏற்பட்ட சோதனைகளையும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

இன்ஷாஅல்லாஹ், யாரெல்லாம் அதிகமாக சோதிக்கப்பட்டு, சோதனைகளில் வெற்றியும் பெறுகிறார்களோ அவர்களுக்கு, மறுமை வாழ்வை அல்லாஹ் இலேசாக்கித் தருவான். இவ்வுலகில் அவர்கள் எதிர்கொள்ளும் ஒவ்வொரு சோதனையும் அவர்களைப் புடம் போடுகிறது. வாழ்க்கையைப் பற்றிய தெளிவான புரிதலை ஏற்படுத்துகிறது.

கடுமையான சோதனைகளும், அனுபவங்களும் அல்லாஹ்வின் பக்கம் நம்மை நெருங்கச் செய்யும். அவனின் மீதான, மறுமையின் மீதான அச்சத்தை அதிகரிக்கும். இவ்வுலகில் சோதனைகளுக்கு ஆட்பட்டதால் மறுமை வாழ்வில் தன்னுடைய சோதனைகள் குறைக்கப்படும் என்ற ஆறுதல் அடியானின் மனதில் ஏற்படுகிறது.

மறுமை வாழ்வை மட்டுமின்றி, தொடர்ந்து சோதனைகளைத் தராமல் இவ்வுலக வாழ்க்கையையும் அல்லாஹ் இலேசாக்கித் தருவான் என்ற நம்பிக்கையையும் கொடுக்கிறது. ●

## கதைத்...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாங்கள் வெளியிட்ட, 'மார்த்தாண்ட வர்மா' நாவலைத் தங்களது அனுமதியின்றித் திரைப்படமாக்கியதாகக் குற்றஞ்சாட்டி 'கமலாலயா' புக் டிப்போ பதிப்பகத்தார் ஆர். சுந்தர்ராஜ் மீது திருவனந்தபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

வழக்கின் முடிவில், படப்பெட்டியை உடனடியாகக் கையகப்படுத்தும்படி காவல்துறைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்தச் செய்தி, *25. 09. 1933* திகதியிட்ட 'இந்து' நாளிதழில் வெளிவந்துள்ளது.

வழக்கின் முடிவில், ஆர். சுந்தர்ராஜ் தவறிழைத்ததாக நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டு, அவருக்கு 5000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் படப்பெட்டியை 'கமலாலயா' பதிப்பகத்தாரிடம் ஒப்படைக்கும்படியும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தீர்ப்பை எதிர்த்து ஆர்.சுந்தர்ராஜ் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

இத்தகவல் 01.07.1935 திகதியிட்ட 'இந்து' நாளிதழில் வெளிவந்துள்ளது. அந்தவகையில் இந்தியத் திரைப்பட வரலாற்றில் காப்புரிமை வழக்கில் முடங்கிய முதல் திரைப்படம் 'மார்த்தாண்ட வர்மா'.

## கி.ராஜநாராயணன்...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலக்கியத்தில் வைக்க வேண்டிய சமதையுடையவைகள் என்பதிலும் இவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை.

'சோளம் விதைக்கயிலே
சொல்லீட்டுப் போன மச்சான்
சோளம் பயிராச்சே
சொன்ன சொல்லும்
பொய்யாச்சே'

பெண்ணின் காதல் ஏக்கத்தை அழகாகவும், எளிமையாகவும் வெளிப்படுத்தும் இந்த நாடோடிப் பாடலை எடுத்துக் காட்டி, ஷேக்ஸ்பியரையும் விக்டர் ஹியுகோவையும் கரைத்துக் குடித்தவர்களால் இப்படி ஒரு பாடல் எழுத முடியுமா?" என்று கேட்கிறார்.

உடல் நலம் குறித்த விசாரணை, குடும்பத்தினர் குறித்த தகவல் பரிமாற்றம் ஆகியவை மட்டுமின்றி அக்கால இலக்கிய நிகழ்வுகள், சமூக சிந்தனை, எழுத்தாளர்களின் மனவோட்டம், ராயல்டியை எதிர்பார்த்து ஏங்கும் வறுமையான வாழ்க்கைச் சூழல், தனிப்பட்ட குணாதிசயங்கள், நுட்பமான அனுபவங்கள், வாசித்த பல்வேறு படைப்புகள் குறித்த விமர்சனங்கள் போன்ற அரிய விபரங்களும் உண்மைகளும் இக்கடிதங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளமையால் இவை வரலாற்று ஆவணங்களாகப் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவை.

## குழப்பத்தில்....

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேறு எந்தப் பிரச்சினைகளும் நீக்கப்படவோ இல்லை தமிழர்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தபோது தமிழரசுக் கட்சி தமிழ்ப் பல்கலைக்கழமெனவும், தமிழ் காங்கிரஸ் இந்துப் பல்கலைக்கழகம் எனவும் முரண்பட்டு அதைத் தடுத்தநிறுத்தினர். தேர்தல் நெருங்கும் சமயத்தில் திருக்கேதீஸ்வரத்தைப் புனிதப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யும்படி கோரிய போது டல்லி அதை மறுக்கவே அரசை விட்டு வெளியேறினர்.

நான்கரை வருடங்கள் ஆட்சியில் பங்குகொண்டபோதிலும் தமிழ் மக்களுக்கென எதுவுமே செய்யவில்லை. வெளி வராத இரகசிய டல்லி - செல்வா ஒப்பந்தம் வெளிவராமலே மரணித்துவிட்டது.

ஆனால் 1970 ஆம் ஆண்டுத் தேர்தலில் சிங்களத் தலைவர்கள் எம்மை ஏமாற்றிவிட்டனர் என வானுயரக் கோஷம் எழுப்பி வாக்குக் கேட்டனர்.

தற்சமயம் மூன்றரை வருடங்களாக எதிர்க்கட்சித் தலைவராகவும் அரசாங்கத்துக்கு முண்டுகொடுத்துக் கொண்டிருந்துவிட்டு தற்சமயம் வெறுங்கையுடன் வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டது விட்டது.

எனவே அடுத்த தேர்தலில் சிங்களத் தலைவர்கள் ஏமாற்றிவிட்டனர் என்று கூறி தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்பார்கள் என்பது மட்டும் உண்மை.

*1965 - 1969* காலப் பகுதியிலும் சரி 2015-2018 காலப் பகுதியிலும் சரி சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களை ஏமாற்றியது ஒருபுறமிருக்க தமிழ் தலைமைகள் தமிழ்மக்களை ஏமாற்றி ஐக்கிய தேசியக் கட்சியுடனான உறவை முதன்மைப்படுத்திப் பேணி வருகின்றனர் என்பதே உண்மை. குறிப்பாக எப்போதும் தமிழ் தலைமைகள் ஐக்கிய தேசியக் கட்சியுடனான உறவின் முன் தமிழ் மக்களின் பிரச்சினைகளை இரண்டாவது தரத்திலேயே கையாள்கின்றது என்பது தமிழ் மக்கள் பல வருடங்களாகப் பெற்ற அனுபவமாகும்.

# ஆரிட்டை சொல்லி அழ?



## இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

## அதிரடி, நெத்தியடி, ஆப்பு

காலியிலை ஒரு நிகழ்ச்சியிலை "இதோ பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மாண்புமிகு பிரதமர் அவர்கள் பரிசில்களை வழங்குவார் எண்டு சொல்லேக்கையே ஒரு ரெலிபோன் வந்திது. சேர் இப்ப நீங்கள் இந்த நாட்டின்ரை பிரதமர் இல்லையாம். பிரதமர் மஹிந்தவாம் எண்டு எல்லாரும் சொல்லினம் எண்டு சொன்ன கையோடை எல்லாத்தையும் போட்டிட்டு ஆத்துப் பறந்து வந்த ரணில் நடந்த எல்லாத்தையும் கேட்டும், கண்டும் விறைச்சுப் போனார். அலரி மாளிகையிலை அப்பிடியே இருந்தவர் இருந்ததுதானாம். எழும்பேல்லையாம்.

எந்த இணையத்தைத் துறந்தாலும், பேப்பரை விரிச்சாலும் மாறி மாறி ஆக்கள் வசைபாடினபடிதான். கனபேர் மைத்திரி உப்பிடிச் செய்திருக்கக்குடாது எண்டு தான் சொல்லினம். சொன்னதுக்கென்ன அந்தாள் கேட்டால்தானே! ஆர் சொன்னாலும் நான் கேக்கமாட்டன் என்னைக் கொல்லச் சதி செய்தாளை நான் எப்பிடி நம்பி வைச்சிருக்கிறது? எண்டு மத்தியச்சம் பேசப்போற ஆக்கள் எல்லாரையும் கேக்கிறாராம்.

ஆனால் அரசியல் கனக்கத் தெரிஞ்ச ஆக்கள் சொல்லினம் உதுக்குப் பின்னாலை ஒரு சிறுகதை அல்ல ஒரு நீண்ட நாவலே இருக்கிது. வாசிச்சாப் பிறகுதான் சரியான நிலைப்பாடு தெரியும் எண்டு. சிலபேர் இந்தியா எண்ணினம். சிலபேர் சீனாவின்ரை வேலை எண்ணினம். ஆனால் பலர் சொல்லினம் தன்னைக் கொல்ல வந்தது றோக்காரர் எண்டு சொல்லுற மைத்திரி எப்பிடி இந்தியாவுக்குச் சப்போட்டா இருப்பர் எண்டு.

இது ஒரு இடியப்பச் சிக்கலாத்தான் தெரியிது. தலைப்பு எங்கை கிடக்கெண்டு தெரியாமல் சனம் தடுமாறுது. அவை அங்காலை இவை இங்காலை. கன்னை பிரிச்சு விளையாடுமாதிரி ஒரு விளையாட்டைப்போலக் கிடக்கு. எங்களையும் எங்கடை நாட்டையும் உலகத்துக்கு முன்னாலை எவ்வளவு மலினமாக்கிப் போட்டினம் தெரியுமே? நாணக்கேடு இது.

என்னத்தைச் சொன்னாலும் உதெல்லாம் மக்களின்ரை நன்மைக்காய் எடுத்த முடிவில்லை எண்டது தெரியுதெல்லே? அப்ப ஆளைப் பிடிக்கேல்லை எண்டு கூடாததெல்லாம் கனக்கச் சொல்லித்தானே அவரை மாத்த வேணும் எண்டு ஒற்றைக்காலிலை நிண்டு சந்திரிக்காவிட்டைச் சொல்லி மாத்தினியள். அப்பிடி நீங்கள் குறை சொன்ன ஆளை எப்பிடிப் பிறகும் கொண்டுவருவினம் எண்டு நான் கேக்கேல்லை. காலமை சந்தேக்கை நிண்ட சனம் கேட்டவை

சட்ட மா அதிபர் என்ன சொல்லுறார் எண்டால் மஹிந்தாவை மைத்திரி நியமிச்சது பிழை எண்டு. மைத்திரி உதிலை அழாப்பிப்போட்டார் எண்டு அவர் திட்டவட்டமாகச் சொல்லிப்போட்டார். அப்பிடி அவர் சொல்லேல்லை எண்டு மஹிந்தாவின்ரை ஆக்கள் கொளுத்தாடு பிடிக்கினம். உலக நாடுகள் எல்லாம் உது பிழை எண்டு கத்தேக்கை சீனாக்காரர் மட்டும் போய் வாழ்த்துக்கள் எண்டு மஹிந்தவுக்குச் சொல்லி இருக்கினம். அவை அப்பிடிச் சொல்லிவினம்தானே! போன வருசம் கொழும்பிலை ஒரு ஹோட்டல் கட்டி திறந்தவை. அதுக்குப்போன மைத்திரியைக் கண்டும் காணாமல் விட்டிட்டு பிறகு மஹிந்தா போகேக்கைதானே அந்த ஹோட்டல் மனேச்சர் "ஜனாதிபதி அவர்களே வருக! வருக!" எண்டு சொல்லி வரவேற்றவர். அப்ப சீனாக்காரற்றை நோக்கம் வேறை. அவைக்கு அப்புகாமியும், அருளம்பலமும், அப்துல்லாவும் நல்லா இருக்க வேணும் எண்டதே நோக்கம்?

எல்லாத்துக்கும் முறை ஒண்டு இருக்கெல்லே? பிரச்சினை வாறது சகஜம். ஆசை வாறதும் இயல்பு. இருக்கப்போற ஆளுக்குக் கதிரையை இழுத்து விழுத்திறமாதிரி எல்லே எல்லாம் நடந்திருக்கு. அப்ப எல்லாம் ஒரு உலுட்டா வேலையாத்தான் கிடக்கு. சனத்தின்ரை நாடியை பிடிச்சுச் சோதிக்கிற விளையாட்டோ தெரியாது. என்னெண்டாலும் உதை நாங்கள் ஆரிட்டைச் சொல்லி அழ?

- கோளரங்கன்.

# ஒரு சொல்

ஒரு சொல்
நாக்கு நுனியைச்
சிலிர்க்கவைக்கும்
தேன் துளி

ஒரு சொல்
மலைப்பகுதியில் தற்கொலை
செய்பவனின் எதிரொலி

ஒரு சொல்
உப்புத் துகள்கள் நிறைந்த
துணிப்பையினால் கொடுக்கும் ஒத்தடம்

ஒரு சொல்
உத்தரத்தில்
தொங்கும் தூக்குக்கயிறு

ஒரு சொல்
கடற்கரை நண்டின் விளையாட்டு
எதிர்பாராத மின்னலில் பிறந்த நெருப்பு

ஒவ்வொரு சொல்லும் எங்கோ
உதிர்ந்த இலை அருவியில்
மிதந்து வருவதைப்போல
நம்மை வந்தடைகிறதென்பதை
மட்டும் மறவாதீர்கள்.

- சீதா





# வலி...

எனக்கு நினைவுதெரிந்த
நாள்களுக்கு முன்பிருந்தே
குடும்ப பாரத்தைத்
தூக்கிச் சுமக்கும் அம்மா
ஒருவழியாய்
வாழ்வின் கவலைகள்
வடியத் தொடங்கிய நாளொன்றில்
காலில் முள் குத்திவிட்டதென
எடுத்துவிடச் சொன்னாள்.
அவளின் தேய்ந்து வெடித்த பாதங்களில்
இதற்குமுன் எத்தனையோ முட்கள்
ஆணியாகியிருந்தன...
ஒரு சிறுமுள்ளின்
வலியை உணரவே
அம்மாவுக்கு
அரை நூற்றாண்டு வாழ்க்கை முடிந்துவிட்டிருந்தது...

- சாமி கிரிஷ்

# இருபது வருடங்களுக்குப் பிறகு...

திண்ணைக் கிழவி செத்துவிட்டது
சாலை விரிவாக்கத்தில்
ஆலமரம் காவு வாங்கப்பட்டது.
மருது தேநீர்க்கடை இருந்த
இடத்தில் பெரிய மனிதர் ஒருவரின்
பண்ணை வந்திருக்கிறது.
இரண்டாவது தெருவுக்குச்
செல்லும் சுலபமான வழியைக்
கட்சிக்காரர் ஒருவரின் சுற்றுச்சுவர்
அடைத்துக்கொண்டது.
கிராமத்து மாமா வீட்டுக்குச்
செல்லும் பாலத்தின்
அடையாளம் எல்லாம்
போய்விட்டதாகப் புலம்பிய
என்னிடம் மிகச் சாதாரணமாக
வழி கூறினான் மாமனின் பேரன்
டாஸ்மாக்குக்கு ஜஸ்ட் எதுத்த வீடு மாமா..."

- கவிஜி



■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு 49

நன்றி தமிழ்லீடர் – அவுஸ்ரேலியா

அப்படியான நேரங்களில் நிறைந்தளவு 'கண்டோஸ்' ரொபி வழங்கப்படுவதுண்டு. ஆனால் அன்று அது மட்டும் வழங்கப்பட வில்லை. தாக்குதலுக்குப் புறப் படும்போது அவை தரப்படக் கூடும் என எதிர்பார்த்திருந்தான். சண்டை மும்முரமாக இடம் பெறும் நேரங்களில் சாப்பாடு, தண்ணீர் எல்லாமே இந்தக் கண்டோஸ், சொக்லட்டுக்கள் தான்.

திடீரென எல்லோரையும் அங்கு வெளியாக இருந்த ஒரு இடத்தில் ஒழுங்காக அமரும்படி கட்டளை வந்தது. ஐஸ்கிறீம் சுவைத்தவர்கள்கூட அதை அப்படியே வைத்துவிட்டு ஓடிப்போய் அமர்ந்து கொண்டனர்.

திடீரென அவர்கள் எவருமே எதிர்பாராத வகையில் அவர்கள் முன் தேசியத்தலைவரும் வேறு தளபதிகள் இருவரும் தோன்றினர்.

மலையவன் எட்டி சிவத்திடம், "அண்ணை!", என்றான். "ஓ.. சத்தம் போடாதை", என அவனைக் கட்டுப்படுத்தினான்.

முதலில் எல்லோரும் இரு நிமிடங்கள் மாவீரர் வணக்கம் செய்தனர். பின்பு அனைவரும் கொடிவணக்கம் செய்ய தலை வர் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார். எங்கும் ஒரு பெரும் மகிழ்ச்சி கலந்த அமைதி பரவிக்கிடந்தது. அனைவரும் அமரக் கட் டளைத் தளபதி அந்தக் களமுனையின் முக்கியத்துவம் பற்றியும் மாவீரர்கள் பெற்றுத்தந்த பெரும் வெற்றிகளை நாம் கைப்பற்றிய

இடங்களை விட்டுவிடக் கூடாது என்பது பற்றியும் சில வார்த்தைகள் பேசினார்.

அந்த நேரத்தில் தலைவரின் கண்கள் ஒவ்வொரு போராளி களின் முகங்களையும் தனித்தனியாக உற்றுஅளந்து கொண்டிருந்தன. அந்தக் கண்களின் கூர்மையான ஒளி, போராளிகள் முகங்களில் படிய அவர்களின் உடலும், மனமும் சில்லிட்டு எங்கோ ஆகாய வெளியில் மிதந்தன. சிவத்தின் பக்கம் அந்தப் பார்வை படிந்த போது அவரின் முகத்தில் ஒரு மெல்லிய புன்னகை பரவியது. அவன் அப்படியே உருகிப் போய்விட்டான்.

சிவத்தின் கவனம் கட்டளைத் தளபதி ஆற்றிய உரையில் செல்லவில்லை. குடாரப்பு மாபெரும் தரையிறக்க நட வடிக்கைக் குப் புறப்பட முன்பு இப்படி ஒரு கூட்டத்தில் தலைவர் சொன்ன வார்த்தைகள் அவன் நினைவில் "உங்களை இப்ப கடற்புலியள் படகிலை கொண்டு போய் இறக்குவினம் திரும்பி வரயுக்கை நீங்கள் தரையாலை நடந்து வருவியள்"

தலைவர் சொன்னது போலவே படகில் போயிறங்கிய அவர்களின் அணி பரவைக்கடல் தாண்டி, சேறும் சகதியும் கடந்து,

இராணுவத்தை உடைத்து உட்புகுந்து, இரு பக்கங்களி லும் விமானக் குண்டு வீச்சுக்களு



டனும் கனரக வாகனங்கள், ஆயுதங்களுடனும்' அலை அலையாய் வந்த இராணுவத்தின ருடன் சமராடி, ஆனையிறவு முகாமைக் கைப்பற்றி பெரும் வெற்றியுடன் போராளிகள் தரை யால் நடந்து வந்து ஆனையிறவில் கொடியேற்றினர். அந்த சக்தி மிக்க வார்த்தைகள் நினைவுக்கு வந்த போது தலைவரில் இருந்து ஒரு ஆத்ம ஒளி தன்னில் பாய்வது போல் அவன் உணர்ந்தான்.

தலைவர் அதிகமாக எதுவும் பேசவில்லை. போராளிகளின் வீரத்தையும், தியாகத்தையும் பாராட்டிவிட்டு அவர், "நாங்கள் இப்ப ஒரு தற்காப்புச் சமரிலை ஈடுபட்டிருக்கிறம். வலிமையான ஒரு தாக்குதல்தான் உண்மையான ஒருதற்காப்பு.ஆனால் எப்பவும் நாங்கள் இடத்தையும் பலத்தையும் தக்க வைக்கிற மாதிரி எங்களுடைய வியூகங்களையும் அமைக்க வேணும். பலத்தை இழந்து இடத்தைத் தக்க வைச்சால் பிறகு இடத்தையும் இழக்கவேண்டி வரும். பலத் தைப் பாதுகாத்து இடத்தை இழந்தாலும் பிறகு இடத்தைப் பிடிக்கலாம். ஒரு போரிலை வீரம் எவ்வளவு முக்கியமோ, தந்தி ரோபாயமும்அவ்வளவுமுக்கியம். ஆனபடியால்நாங்கள்கூடியவரை இழப்புக்களைத் தவிர்த்து எங்கடை தற்காப்புச் சமரை நடத்த வேணும்", எனக் கூறி முடித்தார்.

அவர் எல்லோரிடமும் விடைபெற்றுச் சென்ற பின்பும் கூட சிவத்தால், அவர் ஏற்படுத்திய உணர்வுகளிலிருந்து விடுபட முடியவில்லை. அவர் "வலிமையான ஒரு தாக்குதல் தான் உண் மையான தற்காப்பு", எனக்குறிப்பிட்டதுமீண்டும் மீண்டும் அவனின் காதில் ஒலித்துக்கொண்டிருந்தது. அவன் வெகு விரைவில் ஒரு பெரும் தாக்கு தல் நடவடிக்கைக்குக் கட்டளை வருமென எதிர் பார்த்தான்.

போய்ப்படுத்த சிவம், கன் டோஸ் கைக்கு கிடைக்கப் போகும் கனவுகளுடன் தூங்கிப்போனான்.

காலையில் மலையவன், கண் விழித்துப் பார்த்தபோது அந்த முகாமில் ஏறக்குறைய பல்வேறு அணிகளைச் சேர்ந்த இருநூ றுக்கு மேற்பட்ட ஆண், பெண் போராளிகள் கூடியிருந்தனர். அதைக் கண்டதும் வெகு விரை வில் ஒரு பாரிய தாக்குதல் இடம்பெறக்கூடும் என்றே அவனும் எதிர்பார்த்தான். ஒரு வித மனத்துள்ளலுடன் காலைக் கடன்களுக்காக புறப்பட்டான்.

அந்த முகாம்களுக்கு அண்மை யில் பாலியாற்றின் ஒரு சிறு கிளை ஓடிக்கொண்டிருந்தது. அது வற்றி மணலாறாகக் காட்சியளித்த போதிலும் நடுவில் ஒருசிறிய வாய்க்கால்போன்றுநீர்போய்க் கொண்டிருந்தது. மருத மரங்களைத் தடவி வந்த காலைக் காற்று உடலுக்கு ஒரு விதமான தென்பை ஏற்படுத்தியது. ஒரு நாயுருவித் தடியை முறித்து பல் தீட்டிவிட்டு, ஆற்று நீரில் முகத்தைக் கழுவி விட்டு முகாம் நோக்கி நடந்தான்.

அவன் முகாமுக்குள் போன போது தனது அணியினருக்குத் தேனீர் எடுத்துச் சென்று கொண்டி ருந்த ரூபா, அவனைக் கண்டு விட்டாள். அருகில் வந்த அவள் ஒரு குவளையில் தேனீரை ஊற்றி அவனிடம் நீட்டினாள். அவன் அதை வாங்கிவாயில் வைக்கப் போன போது மரத்திலிருந்த ஒரு கீச்சிட்டான் குருவி, "கீச்.. கீச்.. கீச்சா", எனக் கத்தியது.

தேனீரை வாயில் வையாமலே திரும்பி மரக் கொப்பை பார்த் தான். அது வாலைப், "பட பட வென" அடித்தவாறு மீண்டும் கத்தி யது. மலையவனின் கண்கள் திடீரெனச் சிவந்து கலங்கின. "என்னடா.. என்ன.. நடந்தது..?"

அவன் ஒரு நீண்ட பெருமூச்சுடன்.. ."என்ரை கீச்சிட்டான் குருவியை நான் தானே சுட்டுக் கொண்டனான்" என்றான். அதற்கு மேல் அவனால் பேச முடியாது அவனின் குரல் தளதளத்தது.

அவனுக்கு தான் வதனியைச் சுட்டுக்கொன்றது நினைவுக்கு வந்துவிட்டது என்பதை ரூபா புரிந்து கொண்டாள்.

"டேய்.. நீ சுடாமல் விட்டிருந்தால் ஆமிக்காரர் அவளைப் படாத பாடு படுத்திக் கொண்டிருப்பாங்கள். அவளுக்கு நீ குடுத்தது கௌரவமான வீரச்சாவு. வித்துடலையும் எடுத்து மாவீரர் துயிலும்

இல்லைத்திலை விதைச்சாச்சு. இது உனக்குப் பெருமையடா!"

அவன் எதுவும் பேசவில்லை. புறங்கையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

ஒரு சகோதரிக்குரிய வாஞ்சையுடன், "சரி சரி.. தேத்தண்ணி யைக் குடியடா மலையாண்டி", என்றாள் ரூபா.

ரூபா மலையவனைச் சமாதானப்படுத்தி அவனைத் தெம் பூட்டிய போதிலும் அந்த முகாமுக்கு வந்த நேரம் தொடக்கம், அவ ளின் இதயமும் இரும்பாகக் கனத்துக் கொண்டிருந்தது. போராட்ட வாழ்வில் வீரச்சாவுகள் தவிர்க்கமுடியாதவை என்பதை அவள் நன்கறிவாள். ஆனால் சிலரின் இழப்புக்கள் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்திவிடுவதுண்டு.

அவள் காலை உணவு முடித்த பின்பு தனியாகப் புறப்பட்டுப் போய் அந்த சிறு கிளையாற்றின் அருகில் நின்ற மருதமரமொன்றின் திரண்ட வேரில் அமர்ந்து கொண்டாள். ஆற்றின் மறுகரையில் தெரிந்த பெரு விருட்சங்கள் அடங்கிய காட்டைப் பார்த்தபோது அவளின் எண்ணங்கள் பின்னோக்கி நகர ஆரம்பித்தன.

(நெருப்பாற்றில் நீந்துவோம்)

# கதைத் திருட்டில் சிக்கிய முதல் இந்திய சினிமா

■ வேல் முருகன்

'சர்கார்' திரைப்படத்தின் கதை திருடப்பட்டதான சர்ச்சைகள் நடைபெற்றுவரும் சூழலில் எழுத்தைத் திருடி திரைப்படம் எடுக்கும் கயமையில் சிக்கிய முதல் இந்திய சினிமா 'மார்த்தாண்ட வர்மா' ஆகும். சினிமா பேச • ஆரம்பிக்கும் முன்பாகவே மௌன யுகத்தில் கதையைத் திருடியதாக குற்றம் சாட்டப்பட்டு தனது பெரும் செல்வந்த வாழ்க்கையைத் தொலைத்தவர் கன்னியாகுமரி தமிழரான ஆர். சுந்தர்ராஜ். கதையைக் களவாடி திரைப்படம் தயாரித்த செயலில் இந்தியாவின் முதல் குற்றவாளியும் அவரே.

ஆர். சுந்தர்ராஜ் என்கிற சினிமா ஆர்வலர் மலையாளத் திரைப்படத் தந்தையான ஜே.சி. டேனியலின் 'விகதகுமாரன்' திரைப்படத்தில் திரைக்கலை கற்றவர். சாதீய அடக்குமுறையினால் 'விகதகுமாரன்' தோல்வியைத் தழுவியதால், அதனை வென்றுகாட்ட அரச குடும்ப வரலாற்றைத் திரைப்படமாகத் தயாரிக்கலாம் என்கிற முடிவுக்கு வருகிறார். அவர் மௌனத் திரைப்படத் தயாரிப்பில் ஈடுபட்ட 1932 ஆம் ஆண்டு இந்தியாவில் பேசும்படங்கள் வெகுவேகமாகத் தயாரிக்கத் தொடங்கிய காலகட்டமாகும். 'மார்த்தாண்ட வர்மா' படத்தில் அதிகமான வெளிப்புறக் காட்சிகளும், போர்க் காட்சிகளும் தவிர்க்க இயலாதவையாக இருந்தன. போதுமான அளவுக்கு வளர்ச்சியடையாத அப்போதைய பேசும்பட தொழில்நுட்பத்தில் ஒலிப்பதிவு சார்ந்து சிக்கல்கள் உருவாகும் என்பதால் 'மார்த்தாண்ட வர்மா' கதையை அவர் மௌனப்படமாகத் தயாரிக்க முன்வந்தார்.

தன்னுடைய பாரம்பரியச் சொத்துக்களை விற்று, நாகர்கோவிலில் சினிமா ஸ்ரூடியோவைத் தொடங்கிய ஆர். சுந்தர்ராஜ் திரைப்படக் கலைஞர்களைச் சென்னையிலிருந்து நாகர்கோவிலுக்கு வரவழைத்தார்.




தென்னிந்தியாவின் அப்போதைய பிரபல மௌனத் திரைப்பட இயக்குநரான பி.வி. ராவ், 'மார்த் தாண்ட வர்மா' திரைப்படத்தின் இயக்குநராக நியமிக்கப்பட்டார். இந்தத் திரைப்படத்தின் படப் பதிவுகள் முழுவதும் நாகர்கோவி லிலும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் நடைபெற்றன என்பதை திரைப்படக் காட்சிகளி லிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

1933 ஆம் ஆண்டு 'மார்த்தாண்ட வர்மா' திரைப்படத்தின் படச்சுருள் ராஜகுடும்ப திருத்தலமான பத்மநாப சுவாமி கோவிலிலிருந்து திருவாங்கூர் மன்னரின் மாளிகை வரையில் யானை மீது வைத்து கொண்டுசெல்லப்பட்டு அரச குடும்பத்தினருக்காகத் திரையிட்டுக் காண்பிக்கப் பட்டது. அதனைத் தொடர்ந்து 'மார்த்தாண்ட வர்மா' திரைப் படத்தைத் திரையிடுவதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டார் ஆர். சுந்தர்ராஜ். அப்போதுதான் அவருக்கு அந்தப் பேரதிர்ச்சி காத்திருந்தது.

(18ஆம் பக்கம் பார்க்க)

## தீபாவளி

அடைதிறந்த கூடதிர
கொண்டாடுகிறது ஊர்
அரண்ட விழிகள்
நமைப் பார்க்க இடுங்குகிறது
வளர்ப்புப் பறவை
வாலொடுங்கி மறைவிடத்தைவிட்டு
நகரவில்லை நாய்
குன்றடிவாரத்தில் அகவும் மயில்
தூரப் பறந்திருக்க வேண்டும்
அரவமில்லை
மண்பாண்டத்துள்
குளவி நுழைந்து ரீங்கரிப்பதாய்
எல்லாக் கதவுகளையும்
அடைத்தபின்னும்
உறங்காமல்
வாய் திறந்த கேவல்களுடன்
குழந்தை
அழுகை ஓயாத
அணத்தல்களுடன் ஒருதாய்
செய்வதறியாமல் தோளில் சுமந்து
தேற்ற விழையும்
ஒரு தகப்பன்
கொலைக் கொண்டாடிகள் சூழ
இருக்கக் கூடும் வெவ்வேறு ஊரில்.

- நேசமித்ரன்




## கி.ராஜநாராயணன் கடிதங்கள்

- கலையரசி பாண்டியன்

தமிழின் மூத்த படைப்பாளியான கி.ராஜநாராயணன் தமிழிலக்கியத்துக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது. சிறுகதை ஆசிரியர், நாவலாசிரியர், கட்டுரையாளர், நாட்டுப்புறக்கதை மற்றும் கரிசல் வட்டார வழக்கு அகராதியின் தொகுப்பாளர், பல்கலைக்கழகச் சிறப்புப் பேராசிரியர் என்ற பன்முகங்கொண்ட கி.ராஜநாராயணன் கடித இலக்கியத்திலும் தம் முத்திரையைப் பதித்துள்ளார். சம காலத்துத் தமிழிலக்கிய படைப்பாளிகளுக்கு இவர் எழுதிய கடிதங்கள் 'கி.ராஜநாராயணன் கடிதங்கள்' என்ற தலைப்பிலும் அவர்களின் மறுமொழிகள் 'அன்புள்ள கி.ரா.வுக்கு' என்ற தலைப்பிலும் நூலாக்கம் பெற்றுள்ளன. 'கு.அழகிரிசாமி கடிதங்கள்' என்ற தனிநூலும் வெளிவந்துள்ளது.

'கடிதங்கள் எழுதுவதிலும் கடிதங்களைப் படிப்பதிலும் உள்ள சந்தோஷம் புத்தகங்களில் இல்லை' என்று குறிப்பிடும் கி.ராஜநாராயணன் முப்பது வயதுக்குப் பிறகே கதைகள் எழுதத் தொடங்கியதாகவும் அதற்கு முன் எழுத்தாள நண்பர்களுக்குப் பக்கம் பக்கமாகக் கடிதங்கள் எழுதிக் குவித்ததாகவும் ஒரு பேட்டியில் கூறியிருக்கிறார். ஆகவே அவரிடமிருந்த எழுத்துத் திறமையை வெளிக் கொணர்ந்து ,எழுத்தை அவர் வசப்படுத்திய பெருமை கடிதங்களையே சேரும்.

எந்த ஒரு காட்சியையும் நேர்முக வர்ணனை போல் துல்லியமான விவரங்களுடன் விவரிப்பதில் கி.ரா. வல்லவர். சக மனிதரின் துன்பங்கண்டு துடிக்கும் இவர் மனநிலையைப் பல கடிதங்கள் எடுத்தியம்புகின்றன. வானம் பார்த்த பூமியான கரிசல் மக்களின் வாழ்க்கைப் பாட்டையும், மழையின்றிப் படும் துன்பத்தையும், கொஞ்சங் கொஞ்சமாக விவசாயம் அழிந்து வருவதையும் பல கடிதங்களில் இவரும் ஒரு விவசாயி என்பதால் உணர்வு பூர்வமாகப் பதிவு செய்திருக்கிறார். ஒவ்வொரு கடிதத்தின் முடிவிலும் அப்போதைய விவசாயப் பணி நிலவரம் குறித்து எழுதவும் அவர் தவறவில்லை.




'இங்கே இந்தத் தீபாவளிக்கு ஜனங்கள் அரிசி வடிக்கவில்லை, கண்ணீர் வடித்தார்கள். உணவுப் பற்றாக்குறை நீங்கினால், அறிவுப்பற்றாக்குறையும் தானாக நீங்கிவிடும். புண் ஆறிவிட்டால், பொருக்குத் தானாகவே விழுந்துவிடும் மாதிரி. சோற்றுக்குள்ளே இருக்கான் சொக்கநாதன்'.

பாமர மக்களின் பேச்சு, பாட்டு, வசவு, தாலாட்டு, விளையாட்டு, நாடோடிக்கதைகள் ஆகியவற்றில்தான் நம் மொழி உயிர் மூச்சுடன் விளங்குகிறது என்பதிலும் நாடோடிப் பாடல் களும், காட்டுப் பாடல்களும்

(18ஆம் பக்கம் பார்க்க)




உங்கள் ஆக்கங்களை 'வாசிகை' , ஆசிரியர், புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல் வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

# பசுமை திட்டம் கோயில்களிலும்

**பின்பற்றப்பட வேண்டிய முன்னுதாரணம் 29**

இயற்கையைப் பேண வேண்டிய பொறுப்பு எல்லாவற்றிலும் விடக் கோவில்களுக்கு உண்டு. மதம் உருவானதே மக்கள் பயன்பறவேண்டும் என்பதற்கேயன்றி அதில் சிலர் பிழைப்பை நடத்துவதற்கல்ல.

தற்போது அதைவிட்டு கோயில் நிர்வாகம், அர்ச்சகர்கள், அது சார்ந்த மக்கள் என்போர் தான்தோன்றித்தனமாக நடக்கின்றனர். கோயில் ஏன் ஏற்படுத்தப்பட்டது என்ற வரலாற்றை அறியாதவர்கள் தான் இப்போது கோயில் நிர்வாகத்தில் இருக்கின்றனர்.

கோயில் தொடர்பாகப் பல திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வருகிறது தமிழக அரசு. தற்போது தமிழகத்திலுள்ள கோயில்களில் பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனைக்குட் படுத்தக் கூடாது என்று தமிழக இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் சேவூர் எஸ்.இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார். தமிழகத் திருக்கோயில் வளாகங்களைப் பசுமையாக்கிட சிறந்த சுற்றுச் சூழல் மேம்பாடு குறித்த வல்லுநர்கள் பங்கேற்ற பசுமைக் கோயில் திட்டத் தொடக்க விழாவிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

அத்துடன் கோயில் திருக்குளங்கள் சீரமைப்புப் பணிகள் குறித்து அமைச்சர் சேவூர் ராமச்சந்திரன் நிருபர்களுக்கு அளித்த





பேட்டியில் மாநிலம் முழுவதும் உள்ள நீர் நிலைகளைதூ ர்வாரி சீரமைத்து, பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டு, அதற்கான பணிகளை முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமியால் துவக்கிவைக்கப்பட்டிருக்கிறது. இப்பணிகள் தமிழகம் முழுவதும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இப்போ இரு வருடங்களுக்கு முன்னர் நல்லூர்த் திருவிழாவின் போது பிளாஸ்ரிக் அர்ச்சனைத் தட்டு பாவனைக்குட்படுத்தக் கூடாது என்று யாழ்.மாநகரசபை அறிவித்திருந்தது. ஆனால் பின்னர் அந்த நல்ல திட்டம் கைவிடப்பட்டுவிட்டது.

இங்குள்ள கோயில்களிலும் பொலித்தீன் பாவகைள் தடைசெய்யப்பட வேண்டும். அர்ச்சகர்கள் பொலித்தீன் பைகளிலேயேதான் கோயில் பிரசாதத்தை வைத்து மக்களுக்குக் கொடுக்கின்றனர். லஞ்ச் சீற்றிலேதான் பொங்கல் போன்றவற்றைக் கட்டிக் கொடுக்கின்றனர். அச்சிட்ட செய்திதாளிலேயே வடை, மோதகம் போன்ற பிரசாதங்க ளைப் பொதி செய்து கொடுக்கி ன்றனர். அன்னதானத்தில் சுடு சோறு கறி என்பனவற்றைப் பொலித்தீன் பைகளிலேயே மக்கள் பொதி செய்து எடுத்துச் சொல்வதைக் காணலாம். எனவே மக்கள் சுகாதாரத்துக்குக் கேடான இவைபோன்ற விடயங்களின் உபயோகத்தைத் தவிர்ப்பதை நாம் கோயிலில் இருந்து ஆரம்பிப்போம். இதற்கான சமூக விழிப்புஒர்வையும் கோயிலில் இருந்து தொடங்குவோம்.

அதனை இலங்கை இந்து அறநிலைத்துறை அமைச்சு சட்டமாக அமுல்படுத்தப்பட வேண்டும். பின்னர் ஒரு சுற்று நிருபத்தின் மூலம் அதை நடைமுறைப் படுத்தலாம். இல்லாவிடில் அது போன்ற பழக்கவழக்கங்களை நடைஆறைப்படுத்துவது இலகுவான காரியம் அல்ல என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

# மனிதரில் ஒன்பது பேருக்கு ஒருவர் பட்டினியாய் இருக்கிறார்கள்?



உலகில் பட்டினியால் வாடும் மக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து 2017 இல் 821 மில்லியனை எட்டியிருக்கிறது, அதாவது ஒன்பது பேருக்கு ஒருவர் பட்டினியாய் விடப்பட்டுள்ளார். ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO), உலக சுகாதார அமைப்பு, UNICEF மற்றும் மற்ற குழுக்களால் ரோமில் வெளியிடப்பட்ட “உலகின் உணவுப் பாதுகாப்பு மற்றும் சத்தூட்டத்தின் நிலை “2018” என்ற அறிக்கையே இதனைத் தெரிவித்துள்ளது.

**Number of people facing hunger by country**

| COUNTRY | FACING HUNGER | CAUSES |
|---|---|---|
| Yemen | 17,000,000 | War, blockade |
| Nigeria | 8,900,000 | Civil war, drought |
| Ethiopia | 8,500,000 | Drought |
| Congo (DRC) | 7,700,000 | Civil war, refugee crisis |
| Afghanistan | 7,600,000 | War, drought |
| Syria | 6,500,000 | Civil war |
| South Sudan | 6,100,000 | Civil war, drought |
| Malawi | 5,100,000 | Drought |
| Zimbabwe | 4,100,000 | Drought |
| Cameroon | 3,900,000 | Drought |
| South Africa | 3,900,000 | Drought |
| Sudan | 3,800,000 | Drought |
| Bangladesh | 3,400,000 | Refugee crisis, drought |
| Kenya | 3,400,000 | Refugee crisis, drought |
| Somalia | 3,300,000 | Civil war, drought |
| Pakistan | 2,700,000 | Drought |
| Burundi | 2,600,000 | Drought |
| Haiti | 2,300,000 | Hurricanes, drought |
| Iraq | 2,000,000 | War |
| Uganda | 1,600,000 | Refugee crisis, drought |

World Socialist Web Site WSWS.ORG

புள்ளிவிவரங்கள் அதிர்ச்சியூட் டக்கூடியவையாக உள்ளன: ஐந்து வயதுக்குக் குறைவான 151 மில்லியன் குழந்தைகள் - உலகின் மொத்த மக்கள்தொகையில் 22 சதவீதம் - ஊட்டச்சத்துக் குறைபாட்டால் “வளர்ச்சிக் குறைபாடு” கொண்டுள்ளனர் ஆசியாவில் பத்து குழந்தைக்கு ஒன்று, உயரத்துக்கு ஏற்ற எடையில் இருந்து மிகக் குறைவான எடை கொண்ட “சத்தற்ற நோஞ்சான்” (“wasting”) குழந்தையாக வருணிக்கப்படுகிறது குழந்தை சுமக்கும் வயது கொண்ட மூன்று பெண்களுக்கு ஒருவர் இரத்தசோகையால், பெரும்பாலும் சரியான உணவு ஆகாரம் இல்லாத காரணத்தால், பாதிக்கப்பட் டுள்ளனர்.

உலகில் பட்டினியாக இருக்கும் 821 மில்லியன் பேரில் ஆசியாவில் சுமார் 515 மில்லியன் பேரும், ஆபிரிக்காவில் 256.5 மில்லியன் பேரும், இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியனில் 39 மில்லியன் பேரும், உலகின் எஞ்சிய பகுதிகளில் 20 மில்லியன் பேரும் இடம்பெற்றிருக்கின்றனர்.

“மழைப்பொழிவு, வெப்பநிலை மாறுதன்மை மற்றும் கடும் வறட்சி ஆகியவற்றால் எளிதாகப் பாதிக்கத் தக்க விவசாய அமைப்புமுறை களைக் கொண்டிருக்கின்ற, அத்துடன் மக்கள்தொகையின் மிகப்பெரும் பகுதியினரது வாழ்வாதாரம் விவசாயத்தைச் சார்ந்ததாக இருக்கின்ற நாடுகளில் பட்டினிநிலை கணிசமான அளவு மோசமாய் இருக்கிறது” என்று அது தொடர்ந்து தெரிவித்தது.

சத்தின்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் 2013 இல் - ஆய்வுகள் கடைசியாக கிடைக்கத்தக்கதாக இருக்கின்ற ஆண்டு - 875,000 உயிரிழப்புகளைக் கண்டிருந்தன, ஐந்து வயதுக்கு குறைவான குழந்தைகளின் மொத்த இறப்பு எண்ணிக்கையில் இது 12.6 சதவீதமாகும். இவர்களில், 516,000 உயிரிழப்புகள் தீவிர சத்தின்மையு டன் தொடர்புபட்டிருந்தன் அடிப் படையாக பட்டினியாலோ அல்லது அது தொடர்பான நோய் களாலோ உண்டாகியிருந்தன.

இந்த பூமிக்கோளத்தில் உணவு அபரிமிதமாக இருக்கிறது. ஆனால் பிரம்மாண்டமான விவசாய-வணிக பெருநிறுவனங்களது இலாபமுனைப்பும், மனித குலத்தை செயற்கையான மற்றும் முழுக்க காலாவதியாகிப் போன எல்லைக்கோடுகளால் பிளவுபடுத்துகின்ற பிற்போக்குத்தனமான தேசிய-அரசு அமைப்புமுறையும், ஒரு பில்லியன் மனிதர்களுக்கு ஒரு கண்ணியமான உயிர்வாழ்க்கைக்கு குறைந்தபட்ச நிபந்தனையாக அவசியப்படுகின்ற உணவு கிடைக்காமல் தடுத்து வைத்திருக்கின்றன என்பதுதான் உண்மை.







ன் 'விஸ்வாசம்' படம் இறுதிக்
எட்டி விட்டது. இதையடுத்து அவரது
பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன.
னாத் இயக்கத்தில், ஏ.ஆர்.ரஹ்மான்
போனி கபூரின் தயாரிப்பில்
ு 'தல 59'. இது பொலிவூட்டில்
ற்ற 'பிங்க்' படத்தின் தழுவல் என்றும்
டுகிறது.



5 இயக்குனர்
ட்டி இயக்கும்
ஒன்றில் சமந்தா
ார்.
அதிர்ச்சி,
வர் 70 வயது
நடிக்கிறார்.
' என்கிற
டத்தின் மீள்
ம இப்படம்.

ர்கார்' படத்தைத் தொடர்ந்து, அட்லி இயக்கத்தில்
கவுள்ளார் விஜய்.
ளபதி 63' படத்தின் படப்பிடிப்பு ஜனவரி மாதம்
ங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
னேகமாக படத்திற்கு 'ஆளப்போறான் தமிழன்'
ரிடப்படலாம் எனத் தெரிகிறது.



ராஜ மௌலி இயக்கத்தில் ஜூனியர் என்.டி.ஆர், ராம்சரண் நாயகர்களாக நடிக்கும் படத்திற்கு 'ஆர்.ஆர்.ஆர்.' எனத் தற்காலிகமாகப் பெயர் வைத்துள்ளனர்.

நாயகி யார் என்று அறிவிக்கப்படவில்லை. ஆனால்,நவம்பர் மூன்றாம் வாரம் படத்தின் படப்பிடிப்புத் தொடங்குகிறது.

சந்தானம் நடித்த 'தில்லுக்கு துட்டு 2' படம் வெளியீட்டுக்கு தயாராக உள்ளது. இந்நிலையில், அடுத்த படத்திற்கு தயாராகிறார் சந்தானம்.

அறிமுக இயக்குனர் ஜோன்சன் இயக்கும் புதிய படத்தை சர்க்கிள்பாக்ஸ் என்டர்டெயின்மென்ட் என்ற நிறுவனம் தயாரிக்கிறது.

படத்தில் சந்தானத்திற்கு ஜோடியாக தாரா அலிசா பெர்ரி என்னும் பொலிவுட் நடிகை நடிக்கிறார்.

சங்கர் இயக்கத்தில் ரஜினிகாந்த், அக்ஷய் குமார், எமி ஜாக்சன் இணைந்து நடித்துள்ள படம் '2.0'. ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துள்ள இந்தப் படத்துக்கு நீரவ் ஷா ஒளிப்பதிவு செய்துள்ளார்.

படத்தின் டிரைலர் இன்று சனிக்கிழமை வெளியாகிறது.

ஐந்தாம் விசை குறித்தும் படம் பேசுகிறதாம். இதனால் படம் மீதான எதிர்பார்ப்பு இன்னமும் அதிகரித்துள்ளது.





# முச்சதப் போட்டி

இந்திய – மேற்கிந்தியத் தீவுகளுக் கிடையிலான ஒருநாள் தொடருக்கு போட்டி நடுவராக விளங்கிய இங்கி லாந்தின் கிறிஸ் புறோட்டுக்கு புனேயில் நடைபெற்ற 3 ஆவது ஒருநாள் போட்டி 300ஆவது போட்டியாகும். 2004 ஆம் ஆண்டு நியூசிலாந்து – பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் ஒக்லாண்டில் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் போட்டி நடுவராகத் தனது கடமையைத் தொடங்கிய கிறிஸ் புறோட் 14 ஆண்டு களில் இந்த மைல்கல்லை எட்டியுள்ளார்.

இந்தப்போட்டி தொடங்குவதற்கு முன்னதாக அவருக்கு நினைவுப்பரிசு ஒன்று விராத் கோலியால் வழங்கப்பட்டது. தற்போது சர்வதேச கிரிக்கெட்டில் ஒருநாள் போட்டிகளில் போட்டி நடுவர்களாகக் கடமையாற்றுபவர்களில் இலங்கையணியின் முன்னாள் வீரரான ரஞ்சன் மடுகல்ல மட்டுமே இவரை விட 36 போட்டிகளால் முன்னிலை வகிக்கின்றார். அத்தோடு கிறிஸ் புறோட் 98 டெஸ்ட் போட்டிகளுக்கும் 89 சர்வதேச இருபதுக்கிருபது போட்டிகளுக்கும் இதுவரை போட்டி நடுவராகக் கடமை புரிந்துள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள கிறிஸ் புறோட் '300 என்பது வெறும் இலக்கமல்ல. நான் எனது கனவுகளையும் நோக்கங்களையும் அடைவதற்கு உதவி புரிந்த அனைவருக்குமான கதை. இந்தத் தருணத்தில் எனது குடும்பம், ஐ.சி.சி. இங்கிலாந்து கிரிக்கெட் சபை மற்றும் என்னுடன் பணியாற்றிய அனைவருக்கும் நன்றி' எனத் தெரிவித்துள்ளார்.

1984 தொடக்கம் 1989 ஆம் ஆண்டு வரை இங்கிலாந்து அணிக்காக 25 டெஸ்ட் போட்டிகளிலும் 34 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடிய புறோட் தற்போது இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் விளையாடிவரும் வேகப்பந்துவீச்சாளரான ஸ்ரூவர்ட் புறோட்டின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆடுகளப் பூஜை



இந்தியக் கிரிக்கெட் ரசிகர்கள் இந்திய அணி போட்டிகளில் வெல்ல வேண் டும் என்பதற்காக யாகங்கள் நடாத்துவதும் பூஜைகள் செய்வதும் இந்தியாவைப் பொறுத்தவரையில் புதிய விடயமல்ல. காரணம் மதநம்பிக்கை மிக்க இந்திய நாட்டில் கிரிக்கெட்டும் ஒரு மதமாகக் கொண்டாடப்படுவ தனாலாகும். ஆனால் இந்திய – மேற்கிந்தியத்தீவு அணிகளுக்கிடையில் விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக காலையில் புரோகிதரை அழைத்து ஆடுகளத்தில் பூஜைகள் செய்தமை தற்போது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. ரசிகர்கள் அவ்வாறு செய்திருந்தால் அது பிரச்சினையை உண்டு பண்ணியிருக்காது. ஆனால் இந்த ஆடுகளப் பூஜையில் இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழுத் தலைவரான எம்.எஸ்.கே.பிரசாத் கலந்துகொண்டமை தான் நகைப்புக்கிடமாகியுள்ளது.

இந்த ஆடுகளப்பூஜையில் எம்.எஸ்.கே.பிரசாத்தோடு ஆந்திர கிரிக்கெட் சங்கத்தைச் சேர்ந்த சிலரும் ஆடுகளப்பராமரிப்பாளர்களும் கலந்து கொண்டுள்ளார்கள். பாரம்பரியத்தின் மீதுள்ள நம்பிக்கையாலும் புதிய பருவகாலம் ஆரம்பிக்கப்படவுள்ளதையும் கருத்திற் கொண்டே இந்த ஆடுகளப்பூஜை நடத்தப்பட்டுள்ளது. ஆனாலும் போட்டிகளில் வெல்வதற்கு வீரர்களின் கடின உழைப்புத்தான் கைகொடுக்குமே தவிர இதுபோன்ற ஆடுகளப்பூஜைகள் அல்ல. மதச்சார்பற்ற விளையாட்டினுள் இதுபோன்ற செயல்கள் மத அடையாளத்தை வலிந்து புகுத்தும் செயற்பாடாக நோக்கப்படுவதோடு கிரிக்கெட் குறித்த அவர்களது புரிதல்களையும் கேள்விக்குட்படுத்தியுள்ளது. நடத்தப்பட்ட பூஜையினால் ஆடுகளத்திற்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லையாயினும் எம்.எஸ். கே.பிரசாத் கலந்து கொண்டமை அவர் வகிக்கும் பதவிக்குப் பொருத்தமான செயலல்ல என விமர்சிக்கப்பட்டுள்ளது.

# சந்திப்பு

இந்தவருடம் ஜூன் மாதம் தாய் லாந்து குகையினுள் பயணத்தை மேற்கொண்ட 12 பேர் கொண்ட சிறுவர் உதைபந்தாட்ட அணியும் அதன் பயிற்சி யாளரும் குகையில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கால் உள்ளே சிக்கிக் கொண்டதை அவ்வளவு எளிதில் யாரும் மறந்து விடமாட்டார்கள். பல்வேறு சிரமத்தின் மத்தியில் சிலநாட்களின் பின்னர் உலகநாடுகளின் உதவியோடு அவர்கள் அனைவரும் உயிரோடு மீட்கப்பட்டிருந்தார்கள்.

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் ரஷ்யாவில் நடைபெற்றிருந்த அந்தத்தருணத்தில் போட்டிகளைப் பார்வையிட அந்தச் சிறுவர்களுக்கு பிபா தலைவர் அழைப்பு விடுத்திருந்தார். ஆனாலும் உடனடியாகச் செல்லும் மனநிலையில் சிறுவர்கள் இல்லாததால் அது சாத்தியப்படவில்லை. அதுபோல இங்கிலாந்தின் முன்னணி உதைபந்தாட்டக் கழகமான மன்செஸ்ரர் யுனைற்றட்டின் தலைவரும் தமது சொந்த மைதானத்தில் நடைபெறும் போட்டியைக் காண வருமாறு சிறுவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையிலேயே கடந்த சனிக்கிழமை 12 சிறுவர்களும் அவர்களது பயிற்சியாளரும் இங்கிலாந்தின் ஓல்ட்ரபோர்ட்டில் அமைந்துள்ள மன்செஸ்ரர் யுனைற்றட் கழகத்திற்குச் சென்றுள்ளார்கள். அங்கு மன்செஸ்ரர் யுனைற்றட் அணியின் முகாமையாளரான ஜோஸ் மௌறின்கோவையும் வீரர்களையும் சந்தித்து உரையாடியதோடு அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை ஓல்ட்ரபோர்ட்டில் நடைபெற்ற மன்செஸ்ரர் யுனைற்றட் – எவற்றன் அணிகளுக்கிடையிலான பிறீமியர் லீக் போட்டியையும் இவர்கள் நேரடியாகப் பார்வையிட்டுள்ளார்கள். இதுதொடர்பான புகைப்படங்களையும் காணொளியினையும் மன்செஸ்ரர் யுனைற்றட் கழகம் தமது உத்தியோக பூர்வ ருவிற்றர் வலைத்தளத்தில் பதிவேற்றியுள்ளது.




# தொடரும் தோல்விகள்



இந்திய மகளிர் பட்மின்ரன் நட்சத்திரமான சாய்னா நேவால் 2012 லண்டன் ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற சாதனைக்குரியவர். 2015, 2017 உலக சம்பியன்ஷிப் தொடர்களில் முறையே வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களைப் பெற்றதோடு இந்த வருடம் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டுப்போட்டியில் தங்கப்பதக்கமும் வென்றவர். ஆனாலும் கடந்த 6 வருடங்களாக ஒரேயொரு வீராங்கனையை மட்டும் வெல்ல முடியாமல் தடுமாறி வருகின்றார்.

அந்தவகையில் கடந்தவாரம் நடைபெற்று முடிந்த பிரெஞ் ஓப்பன் பட்மின்ரன் தொடரின் காலிறுதிப் போட்டியில் சாய்னா தாய்வான் வீராங்கனையான ரைசு ஜிங்கிடம் தோல்வி அடைந்துள்ளார். விளையாட்டில் வெற்றி தோல்விகள் ஏற்படுவது சகஜம் என்றாலும் சாய்னாவின் இந்தத் தோல்வியில் உள்ள ஆச்சரியம் என்னவென்றால் ரைசு ஜிங்கிடம் அவர் தோற்பது தொடர்ச்சியான 12 ஆவது தடவையாகும். அதிலும் ஒருவாரத்தினுள் அடைந்த இரண்டாவது தோல்வி இதுவாகும். முன்னதாக கடந்தவாரம் நடைபெற்ற டென்மார்க் ஓப்பன் தொடரின் இறுதிப்போட்டியிலும் சாய்னா இவரிடம் தோல்வியடைந்து தங்கப்பதக்கத்தை தவறவிட்டிருந்தார்.

தற்போது தரவரிசையில் 10 ஆம் இடத்தைப் பிடித்துள்ள சாய்னா நேவால் முதலிடம் வகிக்கும் ரைசு ஜிங்கிடம் தோல்வி அடைவது ஆச்சரியமில்லை என்றாலும் சாய்னா தரவரிசையில் முதலிடம் பிடித்த 2015ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் ரைசு ஜிங்கை அவரால் வீழ்த்த முடியவில்லை. இவர்கள் இருவரும் இதுவரை 19 தடவைகள் மோதினாலும் 5 தடவைகளே சாய்னாவால் வெல்லமுடிந்தது. அந்தவகையில் 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற டென்மார்க் ஓப்பன் தொடரில் இறுதியாக ரைசு ஜிங்கை வென்றதற்குப் பிற்பாடு சாய்னாவுக்கு இன்றுவரை வெற்றி வசப்படவேயில்லை.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 03.11.2018 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.